விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி 13 வியாழக்கிழமை (29.09.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 284

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

## மன்னார் எழுச்சிப்பிரகடன நிகழ்வுக்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கேற்பு



(மன்னார்)

வவுனியா பிரகடனத்திற்கு வலுச் சேர்க்கும் எழுச்சி நிகழ்வு பிரமாண்டமான அளவில் நேற்று மன்னாரில் இடம்பெற்றது.

50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு வவுனியா பிரகடனத்தை வழிமொழிந்தனர். நேற்று மாலை 4மணியளவில் மன்னார் பொதுமைதானத்தில் இந்நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்விற்கு பொதுச்சுடரினை மாவீரர் அன்சாரின் தந்தையாரும், துணைப்படை மாவீரர் சிவசித்தியானின் துணைவியாரும் ஏற்றினர். தமிழீழ தேசியக்கொடியினை 2ஆம் லெப்டினன் மாலதியின் தந்தையார் பேதுருப்பிள்ளை ஏற்றிவைத்தார்.

எழுச்சி சுடரேற்றப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. தலைமை உரையை மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்புயோசப் ஆண்டகை நிகழ்த்தினார்.

மன்னர் அரச அதிபர் தி.விஸ்வலிங்கம், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோராதலிங்கம் ,செல்வம் அடைக்கலநாதன்,கஜேந்திரகுமார், கனகசபை,சிவசக்தி ஆனந்தன், மாவை சேனாதிராசா,இரா.சம்பந்தன்,துரைரட்ணசிங்கம்,மலையக மக்கள் முன்னணித்தலைவர் கே. சந்திர (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவிப்பு

# சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்

## விடுதலைப்புலிகள் விசனம்



(கிளிநொச்சி)

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அங்கத்துவ நாடுகளில் விடுதலைப்புலிகளின் தூதுக்குழுவினர் பயணம் செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தடை விதித்துள்ளமையானது அரச பயங்கரவாதத்தின் செயற்பாடுகளை நியாயப்படுத்துவதாகவும் சமாதான முயற்சிகளை சீர்குலைக்கும் செயலாகவும் உள்ளது.

இம் முடிபிற்கு தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களும் கடும் விசனத்தை தெரிவிக்கின்றனர். இலங்கை அரசின் வற்புறுத்தலுக்கும். கபட நாடகங்களுக்கும் அடிபணிந்து ஐரோப்பிய ஒன்றியம் இம்முடிபை எடுத்துள்ளது என தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிபு குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கையிலேயே தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா நேற்று நாடுதிரும்பினார்

(கொழும்பு)

இம் மாத முற்பகுதியில் நியுயோர்கில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள்சபையின்பொதுஅவை அமர்வில் கலந்துகொள்ளச் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அதிகாலை நாடு திரும்பினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்கள் சூடுபிடிக்க ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில் ஜனாதிபதி நாடு திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்தராஜ பக்ஷவுக்கு ஆதரவு தெரிவிப்பது தொடர்பாக ஜனா திபதியின் முடிபு ஓரிருநாட்களில் தெரியவரு மெனக் கூறப்பட்டது. (ச-4)

## தபால் மூலம் வாக்களிப்பு விண்ணப்பத் திகதி நீடிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிப்பதற்கான கால எல்லை நீடிக்கப் பட்டுள்ளது.

தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பம் நேற்றுடன் முடிவடைந்த போதிலும் அதனை எதிர்வரும் பத்தாம்திகதி வரை நீடிக்க தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தபால் மூல வாக்காளர் பட்டியல் அரச நிறுவனங்களில் பத்தாம் திகதி பார்வைக்கு வைக்கப்படும். பத்தாம் திகதியின் பின்னர் அந்தக் கால எல்லை நீடிக்கப்படமாட்டாது என்று தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. (ச-4)

நாளை நடைபெறவுள்ள பொங்குதமிழ் தொடர்பான பல் வேறு தரப்பினராலும் வெளியிடப் பட்ட அறிக்கைகள் உள்ளே...

பொங்குதமிழ் 2005
செப்டெம்பர் 30
என்னவனே!
பொறுத்தது போதும்
பொங்கியெழு
எங்கள் நிலம்
எமக்கே என்று
அண்டம் அதிரப் பொங்கியெழு!

## மட்டக்களப்பு புனர்வாழ்வுக் கழகம் மீது நேற்றிரவு கைக்குண்டுத் தாக்குதல்

### காவலாளி உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டு.புகையிரத நிலைய வீதிச் சந்தியில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அலுவலகம் மீது நேற்றிரவு 8.30மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலில் ஒருவர் கொல்லப் பட்டுள்ளார்.

இச் சம்பவத்தின் போது கடமையில் இருந்தகாவலாளியான வேலுப்பிள்ளை என்பவர் உயிரிழந்தார். அவரின் சடலம் தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இவ் அலுவலகத்தினைநோக்கி ஐந்து கைக்குண்டுகள் வீசப்பட்டதாகவும் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளார்கள் எனவும் இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் விசாரணையின் ஆரம்ப தகவல்களின் மூலம் தெரிய வந்துள்ளது. (ச-8.4)

## புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலுள்ள மக்கள் சூனியப் பிரதேசத்தில் வாக்களிக்க முடியும்

### தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(திருகோணமலை)

ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் வாக்களிப்பதற் கென சூனியப்பிரதேசங்களில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. இது தொடர்பான கூட்டமொன்று நேற்று திருகோணமலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தெரிவத்தாட்சி அலுவலர்கள், பாதுகாப்பு தரப்பின் உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

தேர்தல் காலத்தில் சூனியப்பிரதேசத்தில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ,அப்பகுதியில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ளல் என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (ச-4)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஒத்திசைவான இலங்கையை உருவாக்கும் நோக்கில் நடைபெற்ற இளைஞர் பாராளுமன்றம் - 2005

இலங்கையில் சட்ட திட்டங்களை உருவாக்கி அதை நடைமுறைப்படுத்துகின்ற ஒரு ஆணிவேராக பாராளுமன்றம் இருந்து வருகின்றது. இதில் வெவ்வேறு இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, விகிதாசாரத்தின் அடிப்படையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட 225 பிரதிநிதிகள் அங்கம்வகிக்கின்றனர். இவ்வகையான ஒரு பாராளுமன்றம் இளைஞர் வசமிருந்தால் எப்படியிருககும் என்பதை அறிவதற்காகவும், 2004ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் சிட்னி மாநகரத்தில் நடைபெற்ற சர்வதேச இளைஞர் பாராளுமன்றத்தின் பிரதிபலிப்பாகவும் உருவானதே இலங்கை இளைஞர் பாராளுமன்றம்-2005.

இலங்கையின் யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாந்தோட்டை வரையுள்ள 25 மாவட்டங்களிலும் இருந்து 16-25வயதிற்கிடைப்பட்டவர்கள் இன,மத,மொழி,விகிதாசார அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இதில் 145 இளைஞர்களும் 80 யுவதிகளும் அடங்கியிருந்தனர். இலங்கையில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட இந்த இளைஞர் பாராளுமன்றம் பண்டாரநாயக்க சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தின ஒழுங்கமைப்புடனும் யுஎஸ் எயிட் (USAID) அனுசரணையுடனும் தனது கன்னி அமர்வினை இலங்கையின் புகழ்பெற்ற பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கை சோசலிஷக் குடியரசின் பிரதமரான மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள கடந்த ஆகஸ்ட் மாதம் 24-28ஆம் திகதி காலப் பகுதியில் நடந்தேறியது.இனம்,மதம், மொழி ஆகியவற்றையும் கடந்து யாவரும் இலங்கையர் என்ற ரீதியில் கலந்து கொண்டமையை ஒரு கணம் சிந்திக்கத் தூண்டுகின்றது.

இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தின் பிரதான பணி இலங்கையிலுள்ள இனத் தலைவர்கள் மத்தியில் பிராந்திய,தேசிய ரீதியில வேரூன்றியுள்ள தம்மையும்,தமது சமூகத்தையும் பாதிக்கின்ற விடயங்கள் மீது ஒரு ஆக்கபூர்வமான சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு, அதற்காக குரல்கொடுத்து செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு இளைஞர்களுக்கு வலுவூட்டி அவர்களை ஒன்று திரட்டுவதன் மூலம் அதற்குரிய களத்தை உருவாக்கி ஆதரவை வழங்குவதாகும்.

ஒத்திசைவான இலங்கையை உருவாக்குதலை நோக்காகவும், இளைஞர்கள் மற்றும் செயற்திட்டங்களின் வலையமைப்பு ஒன்றின் மூலம் ஆக்கபூர்வமான சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தலை இலக்காகவும் கொண்ட இந்த இளைஞர் பாராளுமன்றத்தினுடைய குறிக்கோள்களாக,

1.தகவல் மற்றும் கற்றல் பரிமாற்ற செயன்முறையூடான தேசிய, சர்வதேச ரீதியில் உள்ள பரந்த சமூகத்தினருக்கும் இளம் தலைவர்களுக்கும் இடையில் ஒரு பரஸ்பர உறவுக்கு வழிவகுத்தல்.

2.தத்தமது சமூக முன்னேற்றத்திற்காக பாடுபடும் இனம் தலைவர்கள் முன்னெடுத்துச் செல்லும் செயற்றிட்டங்களினுடைய அபிவிருத்தி,அமுலாக்கம்.

3.பங்களிப்புத் திறன்,அறிவு என்பவற்றை வளர்ப்பதனூடாக அவர்களை சமூகத்தில் சிறந்த தலைவர்களாக்குவதுடன், சமூகத்தின் ஆக்கபூர்வமான நிலைபேறான மாற்றத்தை அமுல்படுத்தல்.

4.சமாதானமான,சமத்துவமான, நிலைபேறான தேசத்தை உருவாக்கும் நோக்குடன் இளம் தலைவர்கள் தொடர்ந்து செயற்படுவதற்கும் அவர்களுக்கு வழிகாட்டுதல் உற்சாகம் அளித்தல், தூண்டுதல் அளித்தல்.

5.பிராந்திய தேசிய ரீதியில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான கட்டமைப்பை உருவாக்கல்.

6.இளம் சமூகத் தலைவர்கள், தீர்மானம் மேற்கொள்பவர்கள் அபிவிருத்தி நடைமுறையாளர்கள் இடையே உத்திசார் வலையமைப்பைக் கட்டியெழுப்புதல்.

7.நாட்டிலுள்ள இளைஞர்கள் தங்களது கருத்துக்களை அபிப்பிராயங்களை குரல் கொடுக்கவும், நாட்டு நடவடிக்கைகளின் தீர்மானங்களை எடுப்பதிலும் முக்கிய பங்காளர்களாக்குவதற்கு களம் அமைத்துக் கொடுத்தும், அடுத்த இளம் தலைவர் சந்ததியினருக்கு உந்துதல் அளித்தலும் சக்தி ஊட்டலும்.

8.இளவயதினர் முகம் கொடுக்கும் பிரச்சினைகள், அவற்றை எதிர்கொள்ளத் தேவையான நடவடிககைகளை எடுத்தல்.

225 உறுப்பினர்களும் தாங்கள் சமர்ப்பித்த செயற்திட்டத்தின் அடிப்படையில 9 பிரதான நடவடிக்கைத் துறை தலைப்புகளுக்குள் 15-20 உறுப்பினர்கள் கொண்ட 12 குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்.

9பிரதான நடவடிக்கைத் துறைகள்

1.சமாதானத்தைக் கட்டியெழுபபுதல், 2.மனித உரிமைகள், 3.நிலைபேறான அபிவிருத்தியும விவசாயமும்,4.சுகாதாரம் மற்றும் எச் ஐ வி எயிட்ஸ்,5.கல்வி,6.இளைஞர் சக்தியூட்டலும் வேலைவாய்ப்பும், 7.பால் ஒதுக்கீடும் பெண்கள் உரிமையும், 8.சிறுவர் உரிமை, 9.சூழல்

அத்துடன் குறிக்கப்பட்ட நேரங்களில் கூட்டு இருக்கைகள் (Joint sitting) ஒழுங்குபடுத்தபபட்டிருந்தது. இதில்,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணுதல்

உலக மயமாக்குதலினால் இலங்கையின் பொருளாதாரமும் சவால்களும்

என்பனபற்றி விரிவாக ஆராயப்பட்டது. இவற்றிலும் மேலாக பிராந்தியக் கூட்டமைப்புக்களின் இருக்கைகளும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. இதில் ஒவ்வொரு பிராந்தியத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தத்தமது பிராந்தியங்களில் உள்ள பொதுவானதும் தீர்க்கக் கூடியதுமான பிரச்சினைகளை ஆராய்ந்தனர்.

குறிப்பாக வடக்கு-கிழக்கு பிராந்தியக் கூட்டத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டது.

இலங்கை இளைஞர் பாராளுமன்றம் 2005,தூண்டுதல் மிக்க விழிப்புணர்வு மிக்க,சந்தோசமிக்க ஆக்கபூர்வமான ஒன்றாக மட்டுமல்லாமல் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதனூடாக ஒத்திசைவான இலங்கையை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. □

**காந்தன்**

## சிறு விளம்பரம்

### திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் சகல வித கெமராக்கள் எலக்ரோணிக்ஸ்கள் திருத்துதல் உதாரணமாக ஜெனரேட்டர் வாட்டர்பம் போன்றவற்றின் பாட்ஸ் கையடககமாக உள்ள பிளாஸ்டிக்பொருள் உடைவு ஒட்டுதல போன்றவை விஷேசமாக செய்யபடும் ரகு போட்டோ டெக்னிக் 301-கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். கன்னாதிட்டி சந்தி சமீபமாக இடம் மேல்மாடி தொடர்பு சு.நாராயணசாமி. (9916)

### கிரிக்கெற் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

உள்ளூராட்சி வாரத்தினை சிறப்பிகதும் முகமாக உள்ளூராட்சி சபைகளுக்கிடையிலான 15 பந்துப் பரிமாற்றம் மற்றும் 11பேர் கொண்ட மென்பந்து சுற்றுப்போட்டியினையும், நல்லூர் பிரதேசசபை நிர்வாக எல்லைக்குட்பட்ட நிறுவனங்கள் மற்றும் விளையாட்டு கழகங்களுக்கிடையிலான 6 பந்துப் பரிமாற்றம் மற்றும் 6பேர் கொண்டதுமான மென்பந்து சுற்றுப் போட்டியினையும் நல்லூர் பிரதேசசபை நடத்தவுள்ளது.

இப் போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை 05.10.2005ற்கு முன்னதாக செயலாளர், தலைமையலுவலகம்,நல்லூர் பிரதேசசபை,திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (19)

### போட்டி முடிவு

நல்லூர்க் கோட்ட மட்ட சமூகக் கல்விப் போட்டியில் தரம் 10,11 இன் வகை 2இல் பொதுஅறிவுப் பரீட்சையில் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவி செல்வி ச.மயூரி -2ஆம் இடத்தையும் சித்திரம்,ஓவியம், நிலவரைபடம், புகைப்படம் போட்டியில் இவ்வித்தியாலயத்தின் மாணவி செல்வி ந.காமினி முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ரு-98)

## இராசி பலன்

**29.09.2005**

**(புரட்டாதி 13, வியாழக்கிழமை)**

**ஆயிலியம் முன்னிரவு 10.07 மணிவரை**

**ஏகாதசி முற்பகல் 09.41 மணிவரை**

**இராகுகாலம் 1.32-3.02 மணிவரை**

**சுபநேரம் 7.32-9.02 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தெய்வ சிந்தை, புதிய விடயம், முயற்சி தாமதம், மனச்சஞ்சலம். |
| இடபம் | உறவினர் உதவி, நல்ல முயற்சி ,பிரயாண நன்மை, செல்வாக்கு. |
| மிதுனம் | காரிய தாமதம், பண விரயம், அதிக வார்த்தை, சிந்தனை மிகுதி. |
| கடகம் | அந்நியர் சந்திப்பு, பிரயாணம்,பொருள் விரயம், முயற்சி தாமதம். |
| சிங்கம் | தொழில் நன்மை, இடமாற்றம், வாக்கு மேன்மை, நண்பர்கள் சந்திப்பு. |
| கன்னி | முயற்சி கைகூடும், நல்லவருமானம், பெருமையடைதல், சகோதரர் உதவி. |
| துலாம் | தொழில் சிந்தை அதிகாரம், உற்சாகம் , உஷ்ணநிலை. |
| விருச்சிகம் | பயம், காரியதாமதம், அதிக செலவு, கட்டுப்பாடு. |
| தனுசு | வாகனபயம், அபகீர்த்தி, முயற்சி தடங்கல்,ஆரோக்கிய குறைவு, |
| மகரம் | தெய்வதரிசனம் ,நல்லசெய்தி, கலந்துரையாடல், தொழில் விருத்தி. |
| கும்பம் | பெரியோர் சந்திப்பு, நல்ல முயற்சி, சத்துரு ஜெயம், உடல் நலம். |
| மீனம் | மனச்சஞ்சலம்,சொத்துப்பிணக்கு, முயற்சி தாமதம்,பணவிரயம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

வளவன்

# பொறுமை காத்து புரிந்துணர்வு பேணுமாறு அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

ஐரோப்பிய கூட்டமைப்பு 'இலங்கையில் பயங்கரவாதம்' என்ற தலைப்பிட்டு கடந்த திங்கட்கிழமை விடுத்திருக்கும் அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளை கண்டித்திருப்பதையொட்டி புலத் தமிழ் மக்களின் சார்பாக அனைத்துலகத் தமிழர் கூட்டமைப்பு தனது அதிர்ச்சியையும் ஆற்றாமையையும் வெளியிட்டுள்ளது.

அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு இதுதொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் தெற்குப் பாகங்களில் சிங்கள தீவிர தேசியவாதப் பயங்கரம் மீண்டும் கொடுந் தலைவிரித்தாட முற்படும் இன்றைய காலகட்டத்தில் ஸ்ரீலங்காவில் நிலவும் பயங்கரவாதத்தைக் கண்டிக்கும் ஐரோப்பியக் கூட்டமைப்பின் பிரகடனம் அமைதி முயற்சிக்கு இடையூறு விளைவிக்கும் தன்மையுடையது என்பதை அனைத்துலகத் தமிழர் கூட்டமைப்பு ஐரோப்பிய கூட்டமைப்புக்கு எடுத்துக்கூற விளைகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை முயற்சிகள் மும்முரமாக முடுக்கிவிடப்பட்டிருக்கும் இன்று வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் பின்னே அணி திரண்டிருக்கும் சிங்களத் தேசிய தீவிரவாதிகள் நோர்வே ஒழுங்குபடுத்திய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் டோக்கியோ நிதிகோலுநரின் இணைத் தலைமை நாடுகள் விதந்துரைத்த சுனாமிப் பொதுக்கட்டமைப்பை கைவிடுமாறும் நெருக்குவாரம் கொடுத்துக கொண்டிருப்பது கண்கூடு.

அனைத்துலக நாடுகளிலும் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு தேர்தல் பரப்புரை மேடைகளில் நின்று இந்தத் தீவிரவாதிகள் வெளி உலகுக்கு உரத்த குரலில் வேண்டுகோள் விடுத்த வண்ணம் நிற்கிறார்கள்.

தமிழ் மக்களுக்கு எதிரான சொற் கொட்டுக்களோடு விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை மீளத் தொடங்குமாறு ஆயுதப் படைகளைத் தூண்டிய வண்ணமும் நிற்கிறார்கள்.

தங்கள் இனக்கருவறுப்பு முயற்சிக்கு ஐரோப்பிய கூட்டமைப்பின் பிரகடனம் மறைமுகத் தார்மீக ஆதரவு வழங்குவதாக அவர்கள் அர்த்தம் கற்பிக்கப் போகின்றார்கள்.இதனால் அமைதி முயற்சியை ஐரோப்பிய கூட்டமைப்பு பிரகடனம் தாமதப்படுத்தலாம் என்ற எமது அச்சத்தை ஐரோப்பிய கூட்டமைப்புக்கு எடுத்துரைக்க நாம் விரும்புகின்றோம்.

இரண்டு தசாப்தங்களின் முன்னர் ஐரோப்பிய கூட்டமைப்பின் அங்கத்துவ நாடுகள் தமிழ் மக்களுக்கு புகழிடம்வழங்கினார்கள் என்றால் இலங்கையில் கனன்றெரிந்த தேசியத் தீவிரவாதிகளின் இனக் கருவறுப்பு அனலின் முன்னே தமிழ் மக்கள் சாம்பலாகி விடுவார்கள் என்று அந்த நாடுகள் உணர்ந்து கொண்டதே அதற்குக் காரணம் எனலாம்.மீண்டும மூண்டுகொண்டிருக்கும் அனலுக்கு தற்போது வெளியாகியிருக்கும் ஐரோப்பிய பிரகடனம் எதிர்பாராத வகையில் மேலும் நெய் வார்ப்பதாக அமையக்கூடும் என்று அனைத்துலக தமிழர் சமூகம் அச்சமடை கின்றது.

சிஙகளத் தேசியத்தின் சார்பாக அரசாங்கம், தமிழ்த் தேசியத்தின் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது போன்று அமைதிப் பேச்சுவார்த்தைகளிலும் அதே சமத்துவ அடிப்படையில் ஈடுபட்டார்கள் அனைத்துலக சமுதாயமும் இந்தப் புரிந்துணர்வை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பியக் கூட்டமைப்பு அங்கத்துவ நாடுகளுக்குள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்ற தீர்மானமானது விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் தங்கள் நியாயத்தையும் தங்கள் இடர்பாடுகளையும் தங்கள் விதப்புரைகளையும் ஐரோப்பிய நாடுகளுக்கு நேருக்குநேர் எடுத்துரைப்பதற்கான வாய்ப்பை அவர்களுக்கு மறுத்துவிடப் போகின்றது.

மேற்குலகில் நனகு நிறுவப்பட்ட ஜனநாயக அமைப்புகளின் விழுமியங்கள் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகள் தொடர்பான நேரடி அறிவை தொடர்ச்சியாக பெறும வாய்ப்பு இவர்களுக்கு மறுக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்காவில் பெருமளவில் அரசியல் கொலைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் அமைதிப் பேச்சுவார்த்தை பங்காளரில் ஒரு பிரிவினரை மட்டும் தன்னிச்சையாகப் பிரித்தெடுத்துத் தண்டிப்பது நியாயமானதோ ஏற்புடையதானதோ அல்ல.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொ[illegible]படும் எந்தத் தண்டனை முயற்சியும் தமிழர் தாயகத்திலும் ஐரோப்பியாவிலும் வாழும் அனைத்துத் தமிழ் மக்களையும் பாதிக்கும் என்பதால் அத்தகைய தண்டனை நடவடிக்கையை தவிர்க்க வேண்டும் என ஐரோப்பிய கூட்டமைப்பில் உள்ள நாடு ஒவ்வொன்றையும் தமிழ் மக்களின் சார்பாக அனைத்துலக தமிழர் கூட்டமைபபு வேண்டி நிற்கின்றது. அமைதி முயற்சியின் வெற்றிக்கும் இது ஊறுவிளைக்கும என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

பொறுமை காத்து புரிந்துணர்வு பேணுமாறு அனைத்துல தமிழர் கூட்டமைபபு கேட்டுக்கொள்கின்றது. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரு-4)

# வருமானத்தை ஈட்டித்தருவதில் 4வது இடத்தில் சுற்றுலாத்துறை

(கொழும்பு)

இலங்கைக்கு அதிக வருமானத்தை ஈட்டித்தரும் துறைகளில் சுற்றுலாத்துறை நான்காவது இடத்தை வகிப்பதாக சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இத்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக சுற்றுலாத் தினத்தை முன்னிட்டு சிகிரியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதியமைச்சர் இதனைத் தெரிவித் தார்.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுடன் பிரதேச மக்களும் சுற்றுலாப் பயண வழிகாட்டுனர்களும் செயற்பட வேண்டிய முறைமை குறித்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

கூடுதல் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதே இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களின் நோக்கம் என அவர் மேலும தெரிவித்தார். (ரு-7)

## இன்று ஒரு தகவல்

# தலைச் சுற்றல்

"சார்! காலையில் எழுந்ததிலிருந்து தலை சுற்றிக்கொண்டிருக்கிறது சார்!" என்று சொல்லிக்கொண்டே ஒருவர் வந்தார். நிமிர்ந்து பார்த்தேன். அவரின் தலை அப்படியே தான் இருந்தது. சுற்றவில்லை. "தலை நேராகத்தான் இருக்கிறது சார்" என்றேன். உங்களுக்கு என்ன சார்! கிண்டலாகத்தான் இருக்கும் அந்தந்த அவஸ்தை அவரவர்களுக்கு வந்தால் தான் தெரியும் என்றார் அவர்.

"அது இருக்கட்டும் சார் தலை கிறுகிறுப்பாக இருந்தால் அதற்கு ஏன் என்னைத் தேடிக்கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்டேன். "எல்லாம் காரணமாகத்தான் வந்திருக்கிறேன். அதை பின் சொல்கிறேன். இப்போது நீங்கள் எனக்குச் சொல்லுங்கள்!! தலை சுற்றல் வருவதற்குக் காரணம் என்ன? என்று கேட்டார்.

உடம்புக்குள் ஏதோ கோளாறு உள்ளதென்பதை நமக்கு முன்கூட்டியே தெரிவிக்கும் அறிவிப்புத்தான் **B.P** என்று சொல்லுகிறோமே இரத்தக் கொதிப்பு அது நமது உடம்பில் இருக்கிறதா என்று சோதனை செய்து பார்க்க வேண்டும். இதனால் தலைச்சுற்றல் வந்ததென்றால் ஆகாரத்தில் உப்பைக் குறைத்துக்கொள்வது நல்லது. இரத்தக் குழாய் தடித்துப் போயிருப்பதாகத் தெரிந்தால் உடனே கொழுப்பு, இனிப்பு போன்றவைகளை ஒதுக்கி விடுங்கள்.

இன்னொரு விடயம் உங்களுக்கு புகைபிடிக்கும் பழக்கம் உண்டா? புகையிலை போடும் பழக்கம் உண்டா? இப்படி இருந்தாலும் தலைச்சுற்றல் இருக்கும். அந்தப் பழக்கங்களை விட்டால் தலைச்சுற்றல் இருக்காது. இந்த உலகம் சுற்றிக்கொண்டிருக்கிறது என்று ஒருவர் உங்களிடம் வந்து சொன்னால் உடனே அவர் பெரிய விஞ்ஞானி என்று நினைத்து விடாதீர்கள். ஏனென்றால் குடித்திருப்பவர் கூட அப்படித்தான் சொல்வார்.

சிலருக்குப் பித்தத்தினால் தலை சுற்றுவது உண்டு. இதற்கு நமது வீட்டிலேயே மருந்துள்ளது தயாரித்து சாப்பிட்டால் சரியாகிவிடும் வேறு ஒன்றுமில்லை. இஞ்சிச்சாறு அரை அவுன்ஸ், தேன் அரை அவுன்ஸ் இவை இரண்டையும் கலந்து சாப்பிடுங்கள் சரியாகிவிடும்.

இரசாயனத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் சிலருக்கு அங்குள்ள நெடி ஒத்துக்கொள்வதில்லை. அதனால் தலையில் ஒரு கிறுகிறுப்பு ஏற்படும். சிலர் எதற்கெடுத்தாலும் தூக்க மாத்திரையைத் தேடிப்போவார்கள். இல்லாவிட்டால் தலைவலி மாத்திரையைத் தேடிப்போவார்கள். தூக்க மாத்திரை, தலைவலி மாத்திரை போன்றவற்றை அதிகம் பாவிப்பவர்களுக்கு தலைச்சுற்றல் வரும். அடிக்கடி இந்த மாத்திரைகளை தேடிப்போடும் பழக்கத்தை விட்டு விட்டால் தலைச் சுற்றலும் நின்றுவிடும்.

சிலருக்கு நரம்பு மிகவும் பலவீனமாக இருக்கும். அவர்களுக்கும் இந்தத் தொல்லை இருக்கும். நரம்பு பலவீனத்தைச் சரிசெய்துவிட்டால் இது சரியாகிவிடும். அதுசரி! அதற்கு என்ன செய்வது? கவலைப்படாதீர்கள் கைவசம் அதற்கும் ஒரு வைத்தியம் உள்ளது. என்னவென்று கேட்கிறீர்களா? மாதுளம்பூ இருக்கிறதல்லவா? அதைக் கொஞ்சம் எடுத்து நன்கு இடித்து அந்தச் சாற்றுடன் சம அளவு தேனை எடுத்துக்கொள்ளுங்கள் இரண்டையும் கலந்து சாப்பிடுங்கள் நல்ல குணம் கிடைக்கும்.

ஆகவே தலைச்சுற்றல், கிறுகிறுப்பு இருந்ததென்றால் அதற்குக் காரணம் என்னவென்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். அதன்பின்பு அதை நிறுத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும் அதுதான் முறை. உடம்பு நன்றாக இருந்தால் தான் மனதும் உற்சாகமாக இருக்கும். அதனால் கெட்டபழக்க வழக்கங்களை விட்டு விட்டால் வாழ்நாள் முழுவதும் நலமாக சுறுசுறுப்பாக இருக்கலாம்.

இவ்வளவு விடயத்தையும் என்னிடம் வந்த அந்த தலைச் சுற்றல் ஆசாமியிடம் சொல்லி முடித்தேன். கடைசியாகக் கேட்டேன் "உங்கள் தலைச்சுற்றலுக்கு மூலகாரணம் என்னவென்று கண்டுபிடித்துவிட்டீர்களா? " என்றேன். 'அதை எப்போதோ கண்டுபிடித்துவிட்டேன். அதனால் தான் உங்களைத் தேடிக்கொண்டுவந்தேன்' என்றார். எவ்வளவு காலமாக இது உங்களுக்கு இருக்கிறது? என்றேன். 'ஆறு மாதமாக' என்றார்.

"அப்படியென்றால் ஆறுமாதமாக புகைபிடித்துக் கொண்டிருக்கிறீர்களா?" என்றேன். 'இல்லை' என்றார். 'புகையிலை போடுகிறீர்களா? என்றேன். 'இல்லை' என்றார். 'வேறு என்ன தான் செய்கிறீர்கள் ? என்றேன். கொஞ்சம் சத்தமாக அவர் கொஞ்சம் கூட அலட்டிக்கொள்ளாமல் 'இன்று ஒரு தகவல் பார்த்து வருகிறேன்' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகளுடன் நேரடியாகப் பேசி சமாதானத்தை ஏற்படுத்துவேன்

## தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து ரணில் உரை

(கொழும்பு)

பிரிவினைக்கு இடமளிக்காது ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வினைக் காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை நடாத்தத் தான் ஏற்கனவே இணங்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இணங்கியுள்ள படி ஒஸ்லோ மற்றும் டோக்கியோ பிரகடனங்களின் ஊடாக அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த தான் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பித்து ஒரு குறித்த தூரம் வரை மட்டுமே நாம் செல்லமுடியும் என்ற அடிப்படையில் தான் செல்கிறோம். ஆனால் தெற்கில் உள்ள அடுத்த பிரதான கட்சி அதுவும் இதற்குள் வரவேண்டும் அப்பொழுது தான் இது முழுமையான வெற்றிகிட்டும்.



அத்துடன் பேச்சுக்களின் போது பிரத்தியேக முஸ்லிம் குழுவொன்றையும் எதிர்கால பேச்சுக்களில் பங்குகொள்ளச் செய்ய ஏற்கனவே நாம் இணங்கி இருக்கின்றோம். அதுவும் எதிர்கால சமாதான நடவடிக்கைகளின் பொழுது கருத்தில் கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (இ-4)

# துணைப்படைப் பயிற்சி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மணலாறு மக்களுக்கான முதலாவது துணைப்படைப் பயிற்சி கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடற்புலி லெப்.கேணல் திருவடி பயிற்சிப்பாசறையில் பயிற்சியின் தொடக்கவிழா நிகழ்வுகள் ஆரம்ப நிகழ்வுக்கு துணைப்படை வீரர் பாஸ்கரன் தலைமை வகிக்க பொதுச்சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ் ஏற்றிவைத்தார்.

லெப்.கேணல் திருவடியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகமும் மலர் மாலையினை போராளி நளனும் அணிவித்தனர்.

பயற்சிப் பாசறையின் பெயர்ப்பலகையினை தளபதி சித்திராங்கன் திரைநீக்கம் செய்துவைத்தார். தளபதி விநாயகம் ஆசியுரையினை நிகழ்த்தினார்.

லெப்.கேணல் ராஜன் கல்விப்பிரிவுப் பொறுப்பாளர் கீதன் சிறப்புரை ஆற்றினார். இத் துணைப்படை பயிற்சியில் சுமார் 200பேர் பங்கேற்று பயிற்சியில் ஈடுபட்டனர்.(து-8)

# புலிகள்- கண்காணிப்புக்குழு அம்பாறையில் சந்திப்பு

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட தளபதிகளுக்கும் அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்குமிடையே சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

காஞ்சிரன்குடாப் பகுதியில் இடம்பெற்ற இச் சந்திப்பில் அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் தலைமையிலான கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளின் சார்பில் அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ராம்,அம்பாறை மாவட்டத் தளபதி லெப்.கேணல் ஜனார்த்தனன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன் அம்பாறை மாவட்ட மக்கள் பிரதிநிதிகளான சவுந்தரராசா சண்முகநாதன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

பேச்சுக்களின் போது அம்பாறை மாவட்ட மக்கள் மீது விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்கள் ,உரிமை மீறல்கள் என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (இ-4)

# தொல்பொருட்கள் கண்டுபிடிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை குச்சவெளிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை புதிய பொலிஸ் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அடித்தளம் வெட்டும்போது தொல்பொருள் சிறப்பு மிக்க இரண்டு கற்தூண்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்த இடத்தைப் பரிசோதனைக்குட்படுத்தி அதன் பின்னர் பொலிஸ் நிலையத்தை அமைக்கும் நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக திருகோணமலை மாவட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதன்போது எட்டு அடி நீளமும் 6 அங்குல அகலமுமான கற்தூண்கள் கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கருதப்படும் மட்பாண்டங்கள் உட்பட மற்றும் பல தொல்பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதனால் அந்த இடத்தில் பொலிஸ் நிலையத்தை அமைப்பது பொருத்தமற்றது என்றும் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.இது தொடர்பான ஆய்வு அறிக்கை தொல்பொருள் ஆணையாளர் நாயகத்திற்குக் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரு-7)

# மட்டக்களப்பில் சூடு ஆட்டோ சாரதி பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திருச்செந்தூர்ப் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் 12 மணியளவில் ஆட்டோ சாரதி ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் இருதயபுரம் மேற்கு வாசியும் 3 பிள்ளைகளின் தந்தையுமான தென்னக்கோன் முதியன் சலகே சுனில் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு தாண்டவன் வெளியில் உள்ள ஆட்டோ தரிப்பிடத்தில் இருந்து வாடகையின் நிமித்தம் சென்று திரும்பக் கொண்டிருக்கையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்த குறிப்பிட்ட ஆட்டோ சாரதி தமிழ்ப்பெண் ஒருவரை திருமணம் செய்து பல வருடங்களாக மட்டக்களப்பில் வசித்து வந்துள்ளார். (இ-4)

# கைதிகளின் பாதுகாப்பை கண்காணிக்க விரைவில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நியமிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் பாதுகாப்புத் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கென பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலைகளிலும் வெளியிலும் கைதிகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக நீதி அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பாதுகாப்புத் திட்டங்களில் குறைபாடுகள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.போதைப் பொருட்களை வைத்திருத்தல், செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துதல் என்பன சிறைச்சாலைகளில் தடை செய்யப்பட்டுள்ளன. எனினும் சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு இந்த நடவடிக்கைகள் சிறைகளில் இடம்பெற்று வருகின்றன.

சிறைச்சாலைகளில் பாதுகாப்புக்கென நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபரை நியமிப்பதற்கான அமைச்சரவை அனுமதி பெற்றுக் கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். நீர்கொழும்பில் சிறைச்சாலைக் கைதிகள் சென்ற பேருந்து மீது இரு நாட்களுக்கு முன்பு மினியங்கொடைப் பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று சிறைக்காவலர்களும் ஒரு கைதியும் உயிரிழந்தனர்.இதனையடுத்தே அமைச்சரினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரு-7)

# ஐரோப்பிய பிரதிநிதியுடன் ரஹுப் ஹக்கீம் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி வால்ட்டர் வில்டனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கொழும்பில் உள்ள வால்ட்டர் வில்டனின் இல்லத்தில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

எதிர்வரும் தேர்தலின் போது சிறுபான்மை மக்கள் மற்றும் சிறுபான்மை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மீது தென்னிலங்கை பேரினவாதிகள் தாக்குதலை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாக இச் சந்திப்பின் போது ஐரோப்பிய பிரதிநிதியிடம் ஹக்கீம் முறையீடு செய்தார்.முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற உத்தரவாதம் அளிக்கும் கட்சிகளைத் தான் தமது கட்சி ஆதரிக்கும் என்று ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் கூறிய ஹக்கீம் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரதான கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளைப் பொறுத்தே யாரை. ஆதரிப்பது என தாம் முடிவு செய்ய உள்ளதாகவும் அவர்களிடம் தெரிவித்தார்.

இச் சந்திப்பின்போது ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் மைக்கேல் மையர், கில்லெஸ் பெர்னார்ட் ஆகியோர் உடனிருந்தனர். (இ-4)

# சச்சின் மீள் பார்வை

## ஒரு புயலின் கதை

என். சொக்கன்

01



## தீராத விளையாட்டுப்பிள்ளை

மும்பை:-

இந்த அழகிய அல்லது அவலட்சணமான நகரம் இந்தியாவின் தவிர்க்கமுடியாத அடையாளங்களுள் முக்கியமான ஒன்று. இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகத்தில் பாதி மும்பையில் தான் நடக்கிறது. அதேசமயம் ஆசியாவின் மிகப் பெரிய சேரிப்பகுதியும் இங்கேதான் இருக்கிறது. அன்றாடம் பணத்தில் குதித்தெழும் தொழில் அதிபர்கள் முதல், தினக்கூலிக்காரர், நாளில் பெரும் பகுதி வியர்வையில் நனைகிற மில்தொழிலாளிகள் வரை பலமொழி பேசும் பலவிதமான ஜனங்களும் நெருக்கி அடித்துக்கொண்டு வாழும் சமரச ஸ்தலம் மும்பை.

பங்கு மார்க்கற், சிவசேனா, கூட்டமான மின்சார ரயில்கள், பலூன் வியாபாரிகள், வண்ணமயமாக மின்னும் பாலிவூட் சினிமா நட்சத்திரங்கள், அராஜக தாதாக்கள், இரட்டை அடுக்கு 'டபுள் டெக்கர்' பஸ்கள், பணக்காரர்களையும் ஏழைகளையும் திடீர் தீர்மானம் செய்யும் குதிரை றேஸ்கள், பிள்ளையார் சதுர்த்தி மெகா ஊர்வலங்கள், நகைச்சுவை முதல் மாஜிக்கல் ரியலிசம் வரை அனைத்தும் மேடையில் விரிக்கும் ஆரோக்கியமான மராத்தி நாடக உலகம், மாலை நேரப் பேல் பூரி, உடனடி மாஸாஜுக்கு எப்போதும் அழைக்கிற மாலிஸ் வாலாக்கள், சௌபாத்தி பீச், கறுத்தக் கடல் நீர், இயற்கைத் துறைமுகம், சிவப்பு விளக்குக் கூண்டுகள், மதவாத அரசியல் , மஞ்சள், கறுப்பு டாக்சிகள், பாலங்கள் இந்திய நுழைவாயில் , கோட்டை, மெரின்டிரைவ், சான்டா இக்ரூட்ஸ், தெருவோர ஷாமியானாக்களில் நவராத்திரிகள், தாண்டியா ஆட்டம், எலிஃபேன்டா குகைகள், இலட்சக் கணக்கானோருக்கு அன்றாடம் மதிய உணவு அருளும் டாப்பா வாலாக்கள், ஜூம்மா மசூதி, குதிரையேற்றம்... இவை அனைத்தையும் தாண்டி மும்பைக்கு ஒரு முக்கிய அடையாளம் இருக்கிறது அது கிரிக்கெற்.

வருடம் முழுதும் மும்பையில் ஏதாவது ஒரு கிரிக்கெற் போட்டித் தொடர் நடந்துகொண்டு இருப்பதைப் பார்க்கலாம்.

மழைகாலத்தில் கூட, கங்கா லீக், டைன்ஸ் ஷீல்ட், ஹாரிஸ் ஷீல்ட், கைல்ஸ் ஷீல்ட் போன்றவை அவற்றுள் முக்கியமான போட்டிகள். சிறு பையன்கள் முதல் பெரியவாகள் வரை எல்லாருக்குமான போட்டிகள் எப்போதும் நடந்து கொண்டு இருப்பதால் மும்பையில் பிறந்து கிரிக்கெற் விளையாடுகிற பையன்களுக்கு தக்க திறமையைப் பட்டை தீட்டிக்கொள்ளவும் நிரூபிக்கவும் வாய்ப்புக்கள் அதிகம். அதனால்த்தான் அன்று முதல் இன்றுவரை விஜய்மெர்ச்சென்ட், விஜய் மஞ்ச்ரேகர், அஜித்வடேகர், அன்சுமர் கெய்வாட், சுனில் கவாஸ்கர், திலீப் வெங்க்சர்கார், சந்தீப் பாட்டில், ரவி சாஸ்திரி, சஞ்சை மஞ்ச்ரேகர், சச்சின் டெண்டுல்கர் ,வீனோத் காம்ப்லி, இப்ரவீண் ஆம்ரே, அஜித் அகர்கர் என்று எல்லாக் காலகட்டங்களிலும் இந்திய அணிக்கு முக்கியமான வீரர்கள் பலரை மும்பை நகரம் தந்திருக்கிறது!

கிரிக்கெற்றை இங்கே யாரும் வெறும் விளையாட்டாகப் பார்ப்பதில்லை. அது ஒரு கௌரவச் சின்னமாக நினைக்கப்படுகிறது. மும்பையில் அனைத்துப் பிரபல பள்ளிகளும் கலலூரிகளும் தங்கள் மாணவர்களின் கிரிக்கெற் ஆர்வத்தை ஊக்குவித்து வளர்க்கின்றனர். வலுவான கிரிக்கெற் அணியைக் கொண்டிருப்பதை பெருமைக்குரிய விஷயமாக நினைக்கின்றனர். இங்கே பள்ளிகளுக்கு இடையே நடக்கிற பிசாத்துப் போட்டிகளில் கூட இந்தியா- பாகிஸ்தான் ஒரு நாள் மேட்ஸ் அளவுக்கு நெருப்புப்பொறி பறப்பதைப் பார்க்கலாம்.

பேராசிரியர் ரமேஸ் டெண்டுல்கர் மும்பையில் புகழ்பெற்ற கீர்த்திக் கல்லூரியில் மராத்தி மொழி ஆசிரியர். இலக்கியத்தில் பெரும் ஆர்வம்கொண்ட கவிஞர். ஆர்ப்பாட்டம் இல்லாத அமைதியான மனிதர். சக மனிதர்களிடையே உயர்வு தாழ்வு பார்க்காமல் எல்லோரிடமும் முழுமையாக பழகக்கூடியவர். மும்பை இளவட்டங்களின் கிரிக்கெற் ஆர்வம்பற்றி ஏற்கனவே சொன்னதுதான். ஆகவே எந்தக் கல்லூரி ஆனாலும் கிரிக்கெற் விளையாடுகிற பெரும் கும்பல் ஒன்று இருக்கும். வருடம் முழுக்க ஏதாவது ஒரு போட்டியில் கலந்துகொள்வதற்கு என்று ஊர் எங்கும், மாநிலமெங்கும் அலைந்து திரிகிறவர்கள் இவர்கள். போட்டிகளில் இவர்கள் ஜெயிக்கிற போது கல்லூரிக்குப் பெருமை தான். என்றாலும், இந்தப் பையன்கள் ஒழுங்காக வகுப்புகளுக்குப் போவதில்லை. பாடங்களைத் தொடர்ந்து கவனிப்பதில்லை என்பதால் வருடக் கடைசியில் தேர்வுகளின் போது முழி பிதுங்குவார்கள். கொஞ்சம் அசந்தாலும் க்ளீன் போல்ட். இப்படிக் கல்லூரிக்காக கிரிக்கெற் விளையாடப் போய் டிகிரியை இழந்த கதைகள் ஏராளம்.

(தொடரும்)

# இலங்கை பொலிஸாருக்கு இந்தியாவில் பயிற்சி

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் அதிகாரிகளுக்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவில் இந்திய அரசு பயிற்சிகளை அளிக்கவுள்ளதாக அரசாங்கத்தின் தகவல்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந் திய-இலங்கை இருதரப்பு நல்லுறவு அடிப்படையில் சட்டம் ஒழுங்கை செயற்படுத்துவது தொடர்பாக 400 பொலிஸாருக்கு இந்திய நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

பொலிஸ் ஆய்வாளர்கள் தரத்திலான அதிகாரிகள் 385 பேரும் துணை ஆய்வாளர்களும் பயிற்சியில் பங்கேற்றனர்.

இணையக் குற்றங்கள், வங்கி முறைகேடுகள் உள்ளிட்ட விஞ்ஞான பூர்வமான குற்றங்களைத் தடுப்பது தொடர்பான பயிற்சிகள் மற்றும் மோப்ப நாய்களை கையாளுதல் தொடர்பான பயிற்சியும் அளிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிக்கான செலவுத் தொகையாக இந்திய அரசு 20 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த யூன் மாதம் கொழும்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் மற்றும் வெளிவிவகார அமைச்சராக இருந்து சுட்டுக்கொல்லப்பட்ட கதிர்காமர் ஆகியோர் தலைமையிலான இருதரப்புக் கூட்டுக் குழுவின் முடிவுகளை அடுத்து இந்தப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (8)

# அனுசரணைப் பணியில் நோர்வே; மஹிந்தவின் நிலைப்பாடு என்ன?

## வினா எழுப்புகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வே அனுசரணையாளர்களாக செயற்படுவது தொர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு என்னவென்று ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்சன் பெர்னாண்டோ இது குறித்து கூறுகையில் ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தலைவராக உள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே அனுசரணை பணிகள் தொடரும் என்று கூறி வருகிறார்.

ஆனால் நோர்வே அனுசரணை பணியை மறு பரிசீலனை செய்யப் போவதாக பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ கூறிவருகிறார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, சட்டம் ஒழுங்கு ,வேலைவாய்ப்பின்மை, வாழ்க்கைச் செலவுடி, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண உதவிகள் ஆகியவற்றில் தனது நிலைப்பாடு எது என்பதை பொது மக்களிடம் மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாக விளக்கவேண்டும். தன்னுடைய 30 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் இந்த நாட்டு மக்களுக்காக மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்றிய முக்கியமான திட்டங்கள் ஏதும் உண்டா? 30 ஆண்டுகள் எவ்வித செயற்திட்டத்தையும் முன்னெடுக்காத மஹிந்த ராஜபக்ஷ அடுத்த 6ஆண்டுகளிலா நாட்டைக் காப்பாற்றுவார்? நாட்டின் ஜனநாயகத்தை மீளக் கொணர்வதற்கும் சட்டம் ஒழுங்கை மேம்படுத்துவதுமான ஒரு வலிமை மிக்க தலைமை தேவை. அந்த மாற்றுத் தலைமையானது ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமே என்றார்.

(ற)

# தனியார் ஊடகங்கள் மீதான பாய்ச்சலுக்கு சுதந்திர ஊடக இயக்கம் கடும் கண்டனம்

(கொழும்பு)

தனியார் ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களுக்கு சுதந்திர இயக்கம் கண்டனம் தெரிவிததுள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அவ் அமைப்பின் பேசசாளா சுனந்த தேசப்பிரிய,சில தனியார் ஊடகங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக இருப்பதாக பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது.

அரசியல் கட்சிகளில் ஊடகவியலாளர் மாநாட்டில் குறிப்பிட்ட ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் பெயர்களைத் தெரிவித்து விமர்சனம் செய்யப்பட்டு வருகின்றன.

தேர்தல் காலத்தில் அரசாங்கம் சார்பான பிரசாரங்களையே அரச ஊடகங்கள் மேற்கொள்ளும் போது தனியார் ஊடகங்கள் மட்டும் பாரபட்சமாக நடந்துகொள்வதாகக் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

எந்தக் கட்சியை ஆதரிப்பது? யாரை முன்னிலைப்படுத்துவது? என்பது தனியார் ஊடகங்களுக்குரிய சுதந்திரம். அதை யாரும் ஒழுங்கு படுத்த முடியாது. அப்படி ஒழுங்கு படுத்த வேண்டுமானாலும் ஜே.வி. பியின் உத்தியோகபூர்வ பத்திரிகையையும் நீங்கள் ஒழுங்குபடுத்த வேண்டியதாக இருக்கும்.

ஜே.வி.பியின் பத்திரிகை வெளிப்படையாகவே பாரபட்சமாக செயற்பட்டு வருகிறது என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின தேர்தல் ஒருங்கிணைப்பாளரான அமைச்சர் மங்கள சமரவீர அண்மைக் காலமாக தனியார் ஊடகங்களுக்கு எதிராக கடும் கருத்துக்களை தெரிவித்து வருகிறார்.

இது தொடர்பில் தேர்தல் திணைக்கள ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவை நேரில் சந்தித்து தனியா ஊடகங்களை ஒழுங்குபடுத்துமாறு வலியுறுத்தப் போவதாகவும் கூறியிருந்தார்.

இதையடுத்தே சுதந்திர ஊடக இயக்கம் இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

(ற)

# மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவருக்கு மிரட்டல

டிப்ளோமா இசை/நடன பட்டதாரிகளின் ஆசிரிய நியமனம் தொடர்பாக யாழ்/கல்வி வலயம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டபட்டதாரி ஒருவரின் வீட்டிற்கு கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணிக்கு சில விஷமிகள் சென்று மிரட்டல் விடுத்துள்ளதாகவும் கல்வி வலயத்தில் கட்டப்பட்டிருந்த பதாதைகள் அறுத்து வீசப்பட்டுள்ளதாகவும் அகிம்சை முறையில் நடைபெறும் தமது போராட்டத்தைக் கொச்சைப் படுத்தும் கோழைத்தனமான செயல்களில் சிலா ஈடுபட்டு வருவது சம்பந்தமாக கஜேந்திரன் எம்.பியிடம் முறையிடப்பட்டுள்ளதாகவும் மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது.

(து)




கலாபூஷணம் புலோலியூர் க.சதாசிவத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் மு.கனகலிங்கம் உரையாற்றுகிறார். மேடையில் கலாபூஷணம் தெணியான், எழுத்தாளர் டாக்டர் எம்.முருகானந்தம் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், நினைவு மலரை டாக்டர் எம்.முருகானந்தம் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை கிராம அலுவலர் க.சண்முகநாதன் பெறுவதை மறுபடத்திலும் காணலாம். (படங்கள்:- மருதங்கேணி நிருபர்)

## சிந்தைக்கு விருந்தளிக்கும் செப்ரெம்பர்

# உலகமேத்தும் பெருமக்கள் பிறந்த, மறைந்த மாதம்

12 மாதங்கள் கொண்டது ஓராண்டு. ஒவ்வொரு மாதமும் தன்னகத்தே ஏதோவொரு சிறப்பைக் கொண்டுள்ளது. 'தைபிறந்தால் வழிபிறக்கும்' என்று தைமாதத்தின் சிறப்பு பேசப்படுகிறது. 'மாதங்களில் நான் மார்கழி' என்று மார்கழியின் பெருமையும் பேசப்படுகிறது. இவ்விதமே ஒவ்வொரு மாதத்திற்கும் ஏதோவொரு சிறப்பு இருப்பதை மறுப்பதற்கில்லை. எனினும் செப்ரெம்பர் சிந்தை கவாந்த மாதமாக விளங்குகிறது.

செப்ரெம்பர் முதலாம் நாளில தமிழால உலகாண்ட தனிநாயக அடிகளாரின் மறைவு அமைகிறது. 'தேமதுரத் தமிழ் ஓசை உலகம் எலாம் பரவும் வகை செய்தல் வேண்டும' எனறு பாரதிகண்ட கனவை நனவாக்கும் வகையில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடாத்தி தமிழன் பெருமையை தரணி அறியச் செய்தவர் புலமை ஊற்றாக விளங்கிய இவர். ஈழத்தமிழர்கட்கு இன்னல ஏற்பட்ட போது, அவர்களுக்காக குரல் எழுபபியவர். சொலமன் வெஸ்ற்றிச்வே பணடாரநாயக்கா தன் தவறை உணரும் முறையில இடித்துரைத்த பெருமை இவரைச் சாரும். 1956இல் தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, தந்தை செல்வாவின் தலைமையில் நடைபெற்ற அறப்போராட்டத்தில் கலந்துகொண்டு அகிலத்திற்குஎம்நிலையை உணர்த்தியவர்.

### கப்பலோட்டிய தமிழன்

செப்ரெம்பர் 6ஆம் திகதி கப்பலோட்டிய வாவுசியின் பிறந்த நாளாகும். உலகக் கடல்கள அனைத்தையும் நாமே கட்டியாழ்வோம என்று, வீம்பும் வீரமும் பேசிய பிரித்தானிய பேரரசின் கொட்டததை அடக்கிய பெருமை இவரையே சாரும். "Britin Shall rule the seas" கடல்களை நாமே கட்டியாழ்வோம் என்று பிரித்தானியா கொக்கரித்தபோது "No, the Tamils shall rule the seas'' இல்லை தமிழர்களே உலகக் கடல்களை கட்டியாழ்வர் என்று முழஙகியவர் இவர். சிறையல் செக்கிழுத்து சித்திரவதைக்காளாகியவர். திலகரின் மாணவராக விளங்கிய பெருமையும் இவரையே சாரும்.

வாளேந்திய தமிழர் நூலேந்துவதா? என்று காந்தியின் அறவழிப் போராட்டத்தை எதிர்த்து, மறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர். இவரின் கப்பலோட்டிஎய வரலாறும், ஆயுதப போராட்டத்தல் நம்பிக்கை கொண்டிருந்த இவரின் வரலாறும் விடுதலைப் புலிகளுக்கும் அதன் அங்கமாக விளங்கும் கடற்புலிகளுககும் தெம்பு தரும் நிகழ்ச்சியாகும். சிறையில் உப்பில்லாக் கூழ் உண்டபோதும், ஒபபிலாச் செந்தமிழச் செல்வனாக விளங்கினார்.

செப்ரெம்பர் 9இல் கலைக்குரிசில் ஆனந்தக குமாரசாமி மறைந்த நாளாகும். ஆசியாக் கண்டத்தில் புகழ்பூத்த சேர்.முத்துக்குமார சுவாமியின் ஒரே மகன் இவர். இவரின் கலைபபடைப்புகள் ஏராளம். அவற்றுள் இவா எழுதிய 'சிவநடனம்' (Cosmic dance of siva) என்ற நூல் தமிழின் மெய்யியல் துறையில் பெற்ற நுண்ணறிவை எடுத்துக்காட்டுகிறது.

### பாட்டுக்கொரு புலவன்

பாட்டுக்கொரு புலவன் பாரதிமறைந்த நாள் செப்ரெம்பர் 11ஆகும். அவரின் நூலகளான பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு, கணணன் பாட்டு என்பன இவருக்கு இறவாத புகழைத் தந்துள்ளன. தமது செந்தமிழ் நாடு என 40 வரி கொண்ட பாடலில் 15 இடங்களில் தமிழ்நாடு, தமிழ்நாடு என வலியுறுத்தியுளளார். 'நித்தம் தவம் செய்யும் குமரியெல்லை வடபுகழ் மாலவன் குன்றம்' இவற்றிடையே மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு என தமிழ் நாட்டின் எல்லையை தெளிவாக வலியுறுததி மொழிவாழ, இனம்வாழ, நாடு வாழ வேண்டும் என்ற ஒப்பற்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியவன் பாரதி.

### தமிழ் வளர்த்த தாமோதரம்பிள்ளை

தமிழில் பதிப்புத்துறைககு அடித்தளமிட்டவர் ஆறுமுகநாவலர். அதற்கு சுவர் எழுப்பியவர் சி.வை.தாமோதரம்பிள்ளை. கூரை வேய்ந்தவர் உ.வே.சுவாமிநாத ஐயர் என்று திரு.வி.க.மொழிந்தவை பொருள் பொதிந்தவையாகும். இவர் கற்றோர் ஏற்றும் கலித்தொகை உட்பட 11 நூல்களை பதிப்பித்துளளார். இவர் மறைந்தபோது பருதிமா கலைஞன் உள்ளமுருக பின்வருமாறு கூறினார்.

"காமோதி வண்டு தேன் கடிமலர் கூடுதல போல் நாமோது செந்தமிழில் நனனூல பதிப்பித்த தாமோதரம் பிள்ளைச் சால்பெடுத்து சாற்றவெவர் தாமோதரமுடையார்" தாமோதரனார் 1832இல் சிறுப்பிட்டியில் தோன்றி 68 ஆண்டுகள் வாழ்நத நிலையில் 1.1.1901இல சென்னையில் புரசவாக்கத்தில் உயிர் நீத்தார்.

### தமிழர் பேரவையை கண்ட சேர்.பொன் அருணாசலம்

இலங்கை அரசியலில் தனக்கென தனியிடம் பெற்று விளங்கியவர்கள் இரு உடன் பிறப்புக்கள். மூத்தவர் சேர்.பொன்.இராமநாதன், மற்றையவர் அருணாசலம். இவர் 1854 செப்ரெம்பர் 14 இல் பிறந்தவர். இலங்கையின் அரசியல், தொழிற்சங்கம், பல்கலைகழகம் போன்ற அனைத்திற்கும் தோற்றுவாயாக இவர் விளங்கியமையால் இவர் அனைத்து இயக்கங்களின் தந்தை என வாழத்தப்படுகின்றார். இறுதியில் சிங்களவர்களால் ஏமாற்றப்பட்ட நிலையில் 1923இல "இலங்கைத் தமிழர் பேரவையை" உருவாக்கி தேசியம் என்ற பெயரில் தமிழினம் பூண்டோடு அழிக்கப்படுவதை நான் எதிர்க்கிறேன் என போர்க்கொடி எழுப்பியவர். அவா மும்மொழியில் வல்லுனர். 'மெய்யியலும், மொழிபெயர்ப்புக்களும்' என அவர் வெளியிட்ட நூல் அவர் தத்துவத்துறையில் தலைசிறந்து விளங்கியதற்குச் சான்று. அவரின் 'பேச்சுக்களும் எழுத்துக்களும்' என்ற நூல் அவரது ஆழ்ந்த அரசியல் அறிவை எடுத்துக்காட்டுகிறது.

### ஈழத்தமிழருக்காக ஓங்கிக் குரல் கொடுத்த அறிஞர் அண்ணா

"அண்ணாத்துரை எனும் அண்ணல் தமிழ் நாட்டு வண்ணான் அழுக்கெடுப்பில், வாய்மொழியில் பண்ணாவான், சிற்பன் எழுத்தோவியத்தில செவ்வரசு, நாவாயின் அற்புதம் சூழ மாலுமி என்றாடு" என்று தமிழ்த் தென்றல். திரு.வி.கவால் வாழ்த்தப் பெற்றவர் அண்ணா. அவர் தமிழ்நாட்டின் அழுக்கெடுப்பில் வ்ண்ணானாகவும, தமிழக அரசாகிய நாவாயை கப்பலை ஏற்றமுறையில் செலுத்திய மாலுமியாகவும் விளங்கியவர்.

ஈழத்தமிழர்கள் எப்பொழுது இன்னலுற்றபோதும, அவர்களுக்காக திராவிட நாட்டிலும் "Home land" இதழிலும் மாற்றான் தாய் மனப்பாங்கோடு சிங்கள அரசு செயறபடுகிறது எனக் கண்டனம் தெரிவித்துக் கட்டுரைகள் எழுதியவர். மாநாடு கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றியவர்.

ஐ.நா.மன்றத்திற்கு அறிக்கைகள் அனுப்பியவர். ஐ.நா மன்றத்தின் தீர்மானங்களுக்கமைய இலங்கையில் நடைபெறும் படுகொலைகளைத் தடுக்க இந்தியா தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என்ற தீர்மானம் வழங்கியவர். இவ்ர் பிறந்தநாள் செப்ரெமபர் 15 ஆகும்.

### தமிழக மறுமலர்ச்சியின் தந்தை மறைமலை அடிகளார்

அக்கிராசனர் அகற்றப்பட்டுள்ளார். இப்பொழுது தலைவர் தலைமை தாங்குகிறார். காரியதரிசியைக் காணவிலலை. செயலாளர் செம்மையோடு வீற்றிருக்கிறார். பொக்கசாளர் புதைக்கப்பட்டுள்ளார். பொருளாளர் பொலிவோடு வீற்றிருக்கிறார். போசகர் போன இடம் தெரியாது. மாறாக காப்பாளர் கனிவோடு காட்சியளிக்கிறார். இத்தகைய வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தியவா யார்? வேறு யாருமில்லை சுவாமி வேதாசலமாக விளங்கி மறைமலை அடிகளாக மலர்ந்த பெருந்தகைதான். தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலையடிகளுக்கு உண்டு. அவர் பேச்சு பல பேச்சாளரைப் படைத்தது. எழுத்து பல எழுத்தாளரை ஈன்றது. நூல் பல நூலாசிரியர்களைத் தந்தது.

'தென்னாடே அடிகள், அடிகளே தென்னாடு என்று மண்ணும் முழங்கும், மரமும் முழங்கும்' என்று தனித்தமிழ் இயக்கம் கணட மறைமலை அடிகளாரை தமிழ்த தென்றல திரு.வி.க வாழ்த்துகிறார். பெருந்தகை மறைமலை அடிகள் மறைந்தது செப்ரெம்பர் 15 ஆகும். தமிழகத்தை அரண் செய்த இயற்கை மலைகள் 2 ஆகும். ஒன்று தென்குமரி. மற்றையது திருவேங்கடமாகும். தமிழகத்தில் தமிழுக்கு அரணாக விளங்கிய மானிட மலை, மறைமலை ஆகும்.

### வாழ்வகத்தைக் காத்த வன்னியசிங்கம்

1959, செப்ரெம்பர் 17 வாழவகத்தைக காத்து வண்டமிழை வாழவித்த வன்னியசிங்கம் மறைந்த நாளாகும். 48 ஆண்டுகளே வாழ்நத இவர் பன்னிரண்டு ஆண்டுகளே அரசியலில் ஈடுபட்டிருந்தபோதும் அவர் ஆற்றிய அளவற்ற பணியினால் அனைத்து தமிழ் உள்ளத்திலும் காலத்தை வென்று வாழ்கிறார்.

"எல்லாம் தமிழிற் செயதே எம் வாழ்வாம; தமிழைக் காப்போம் வாரீர்'' என்பது அவர் எமக்கு விட்டுச்சென்ற மறைமொழியாகும். இவர் தந்தை செல்வாவின் வலது ்கையாக விளங்கினார் என்பதை வரலாறு நன்கு உணர்த்தி உள்ளது.

### தமிழ்த் தென்றல் திரு.வி.க

பெண்ணின் பெருமை பேசி தொழிற்சங்க இயக்கம் கண்டு செய்தி இதழில செந்தமிழைப் பெய்து பேச்சு ஒத்த எழுத்தையும் எழுத்தை ஒத்த பேச்சையும் நிகழ்த்தி தம் பேச்சுக்கும் எழுத்துக்கும் ஏற்க தனி மனிதன் வாழ்விலும் பொது வாழ்விலும் ஒழுக்கத்தை உயிரென ஓம்பியவர் திரு.வி.க. பல எழுத்தாளர்களிடம் காணமுடியாத சிறப்பியல்புகள் இவரிடம் குடிகொண்டிருந்தது.

எனவேதான் மாற்றாரும் இவரை மதித்து போற்றினர். 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' 'முருகன் அல்லது அழகு' 'காந்தி அடிகளும் மனித வாழ்க்கையும்' என்பவை அவர் எழுதிய பல நூல்களில் ஒரு சிலவாகும். அவர் மறைந்தது 1954 செப்ரெம்பர் 17இல்.

### பகுத்தறிவுப் பகலவன் பெரியார்

எதையொட்டியும் கேள்வி கேட்க மறுத்து அனைத்துக்கும் ஆம் என ஒத்தூதுகின்ற நிலையில் தம் சிந்தனையை அடகு வைத்து தமிழ் மக்கள் வாழ்ந்தனர். தமிழரின் மொத்த எண்ணிக்கையில் மூன்று விழுக்காடுதான் பார்ப்பனர்கள். எனினும் இந்த மூன்று விழுக்காட்டு பார்ப்பனர்க்கு தம் மூளையை அடகு வைத்திருந்தனர் தமிழர். இவ்விதம் அடிமைத்தனத்திலும் அறியாமையிலும் மூழ்கியிருந்த மக்களைத் தன் புரட்சிமிக்க சிந்தனையாலும், எழுத்தாலும், பேசசாலும் ஆட்கொண்ட வரலாறுதான் பெரியாரின் வரலாறாகும். ஒரு நூற்றாண்டின் வரலாற்றை ஒரு மாத்திரையில் திரட்டித் தந்தவர் பெரியார் என்று அண்ணா வாழ்த்தியது பொருள் பொதிந்த கூற்றாகும்.

ஏற்பட்ட அழிவைச் சுட்டிக்காட்டி தமிழினத்தைக் காப்பாற்ற முயன்றவர். தமிழகப் பலகலைக்கழகங்கள் பலவற்றில் எம்.பில் முனைவர் (டாக்டர்) பட்டத்துக்கு ஆய்வுப் பொருளாக கொள்ளப்படுவது பெரியாரின் வாழ்வும் சிந்தனையும் என்பது குறிப்பிடத்தக்கது. முழுமையான படிப்பறிவு இல்லாத நிலையிலும் பகுத்தறிவுச் சிந்தனையைப் பரப்பியவர் பெரியார் என்பதை அறிவுலக வட்டாரம் அவருக்குக் கொடுத்த தனி மதிப்பில் இருந்து அறியத்தக்கதாக இருக்கிறது. பெரியார் பிறந்தது செப்ரெம்பர் 17.

### கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை

'உள்ளத்து உள்ளது கவிதை, இன்பம உருவெடுப்பது கவிதை, தெள்ளத் தெளிந்த தமிழில் தெரிந்து உரைப்பது கவிதை' என்று கவிதைக்கு இலக்கணம் தந்தவர் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை. அவர் மறைந்தது செப்ரெம்பர் 26இல். அவரின் மலரும் மாலையும், ஆசிய ஜோதி, உமார் கயாம் பாடல்கள் அவர் படைத்த நூல்களில் சிறந்தவையாகக் கொள்ளப்படுகினறன. அவர் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் போல் இயற்கை கவிஞராகவும் குழந்தைக் கவிஞராகவும் விளங்கினார். ஆசிய ஜோதியும் உமார் கயாம் பாடல்களும் தழுவல் கவிதைகளாய் இருந்த போதும் தமிழில் எழுந்த மூலக் கவிதைகளாகவே காட்சியளிக்கின்றன. அவரின்

''வெய்யிற்கேற்ற நிழல் உண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மது உண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு
வையம் தரும் இவ்வனம் இன்றி வாழும்
சொர்க்கம் வேறுண்டோ''

என்ற அவரின் உமர் கயாம் பாடலின் தமிழ் ஆக்கத்தை எவ்வளவு தரம் பாடி மகிழ்ந்தாலும் அவை சுவை ஊட்டியபடியே இருக்கும்.

### எம் நெஞ்சில் நிறைந்த தியாகி திலீபன்

தொடர்ச்சியாக சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட நிலையில் அறவழிப் போராட்டத்தை கைவிட்டு மறவழிப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து உலகம் வியக்குகின்ற போராட்ட நுணுக்கங்களோடு வெற்றி கண்டு வருபவர்கள் தான் விடுதலைப் புலிகள். அவர்களுக்கு மறவழிப் போராட்டமும் தெரியும், அண்ணல் காந்தியை மிஞ்சுகின்ற அளவுக்கு அறவழிப் போராடடததையும் நடத்தமுடியும் என்பதை இயக்க பெரும் தலைவர் தியாகி திலீபன் ஊடாக உணர்த்திச் சென்றுள்ளனர். அயர்லாந்திலும் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த வரலாறு உண்டு.

அண்ணல் காந்தியடிகளின் உண்ணா நோன்புப் போராட்டம் அவரின் 40-50 வயதைத் தாண்டிய போராட்டமாகும் அவர் உயிா விடும் உண்ணா நோன்பை நோற்ற போதும் கூட தண்ணீருடன் உப்பைக் கலந்தே உண்ணா நோன்பை மேற்கொண்டார். ஆனால் நம் திலீபனோ உப்புக் கலந்த நீரையோ அல்லது உப்பில்லா நீரையோ கூட அருந்த மறுத்து 14 நாட்கள் கடும் தவம இருந்து உலகத்தை வியப்பில் ஆழ்த்தி காந்தியை தந்த இந்திய துணைக் கண்டத்தையே வெட்கித் தலை குனிய வைத்து தமிழ் கூறும் நல் உலகம் ஐயோ! என்று அலற 'உடல் தம் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு' என்று செப்ரெம்பர் 26. 1987 இல் உலகம் முழுவதும் அவரை மறக்க முடியாத நிலையில் உயிர்விட்ட காடசியை நாம் கண்டோம்.

தமிழ் மக்கள் குறிப்பாக, தமிழகத்தின் பிற்பட்ட பகுதிகளில் வாழ்ந்த தமிழ மக்கள் சிந்தனையும் செயலும் அற்று சீரழிந்து கொண்டிருந்தனர்.

"கண்ணுடையவர் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதவர்" என்ற வள்ளுவர் குறளுக்கு விளக்கம் அளிக்கின்ற முறையில் கண்ணுடைய கற்றோராக தமிழ் மக்களை வாழச் செய்தவர் அண்ணாமலை அரசர், விபுலானந்த அடிகள், தனிநாயகம் அடிகள் மற்றும் ஈழத்துத் தமிழறிஞர்கள் பலர் அண்ணாமலைப் பல்கலைக்கழத்துடன் தொடர்பு கொண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு புகழ் சேர்த்து வந்ததுடன் தாமும் புகழ் பெற்று வாழ்ந்தனர். அண்ணாமலை அரசர் அண்ணாமலைப் பல்கலைக கழகத்தை உருவாக்கியதோடு தமிழ் இசைக்கு புத்துயிர் வழங்கியவர். புகழ் படைத்த தாமரைத் தடாகப் பாடலைத் தந்த தணடபாணி தேசிகர் முருகனை எமமுன்னே நிறுத்திய சீர்காழி கோவிந்தராசன் ஆகியோரிடம் தமிழசை பயின்ற பலர் ஈழத்து தலை சிறந்த இசை வல்லுனர்களாக விளங்குவதை நாடு அறியும். அண்ணாமலை அரசரின் தோற்றம் செப்ரெம்பர் 30.

சுருங்கக் கூறின் செப்ரெம்பர் முதல் தொடங்கி முப்பது வரை புகழ்பூத்த பெருமக்கள் குறிப்பாக தமிழ் அறிஞர்கள் தோன்றி மறைந்துள்ளனர். எனவே செப்ரெம்பரின் புகழை நாம் அனைவரும் சேர்ந்து பாடுவோமாக.

**மா.க.ஈழவேந்தன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்**

## வாய்ப்புற்று நோய்க்கான இலவச மருத்துவ பரிசோதனை

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம, இரண்டாம திகதிகளில் 50 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாய்ப்புற்று நோய்க்கான இலவச மருததுவ பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ்.பிரதி மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இம்மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளும் இடங்களும் நேரமும் வருமாறு, 01.10.2005இல் பரிசோதனை நடைபெறும இடங்கள்,

காலை 8.30-12.30 மணிவரை- உசன் மகாவித்தியாலயம் சு.வை.அ.பணிமனை சாவகச்சேரி, ஆரம்ப சுகாதார நிலையம் கச்சாய், மத்திய மருந்தகம் வரணி, வீரசிஙகம மகாவித்தியாலயம், விஸ்ணு வித்தியாலயம் மறவன்புலவு,

பி.ப 1.30-4.30 மணி வரை- மத்திய மருந்தகம் மிருசுவில் சு.வை. அ.பணிமனை சாவகச்சேரி, ஆரம்ப சுகாதார நிலையம் கச்சாய், மத்திய மருந்தகம் வரணி, வீரசிங்கம் மகாவித்தியாலயம், பிரதேச சபை அலுவலகம் நவாற்குழி.

02.10.2005 பரிசோதனை நடைபெறும் இடங்கள் காலை 8.30-12.30 மணிவரை- முத்துக் குமாரசாமி வித்தியாலயம் கைதடி, குருசாமி வித்தியாலயம் கைதடி, கமலாசினி வித்தியாலயம் மட்டுவில், ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுவில், சு.வை. அ.பணிமனை சாவகச்சேரி, சண்முகானநதா வித்தியாலயம் கல்வயல்.

பி.ப.1.30-4.30 மணிவரை- முத்துக்குமாரசாமி வித்தியாலயம் கைதடி, குருசாமி வித்தியாலயம் கைதடி, கமலாசினி வித்தியாலயம் மட்டுவில், ஸ்ரீபாரதி வித்தியாலயம் மந்துவில், பிரதேச சபை மாநாட்டு மண்டபம் கொடிகாமம், அமிர்தாம்பிகை வித்தியாலயம் நுணாவில்.

இதில் 50 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ந)

# பொங்குதமிழில் அணிதிரள அறைகூவல்!

## போராட்டமின்றி நீதியில்லை நீதியின்றி சமாதானமில்லை

### -யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம்

சமாதான வாழ்வே எங்கள் இலட்சியம, இதனை எங்கள் இருதயத்தில் அமர்த்துவோம். தமிழ் பேசும் மக்கள் ஒரே குடையின கீழ் தங்கள் உரிமைக்குரலான "சுயநிர்ணய உரிமை, மரபு வழித் தாயகம், தனித் தேசிய இனம், நீதியான நிலையான சமாதானம்" என்ற அபிலாசைகளை சிங்கள மக்களுக்கு மட்டுமன்றி சர்வதேசமும் அறியவேண்டுமென்பதையே "பொங்குதமிழ்" நிகழ்வுகள் எடுததுக்காட்டுகின்றன.

2001ஆம் ஆண்டு இந்நிகழ்வினை தொடக்கிய யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம், அரச சார்பற்ற நிறுவனங்கள், மனிதநேய அமைப்புக்கள் உட்பட பலரும் ஒன்றிணைந்து செயல்படுவதை வரவேற்பதோடு தமிழ் பேசும் மக்கள் நன்றி கூற கடப்பாடுடையவர்களாவார்கள். ஈழத் தமிழர்கள், புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் நாடுகளிலும் "பொங்குதமிழ்" நிகழ்வுகள் வருடாவருடம் முன்னெடுக்கப்படுகின்றன.

"சாம, பேத, நான, தண்டம்" என்ற கோட்பாட்டிற்கமைய ஆயுதமேந்திய விடுதலைப்புலிகள் தமது கை மேலோங்கி நின்ற காலகடடத்தில் ஒருதலைப்பட்சமாக போர்நிறுதததை அறிவித்தார்கள். தொடர்ந்து தமிழ் பேசும் மக்களின் இயலபு வாழ்க்கையை ஏறபடுத்திக்கொடுக்க வேண்டுமென்ற முழுமையான நோக்குடன் போர்நிறுத்த உடன்படிக்கையை அரசாங்கத்துடன் 22-02-2002ஆம் ஆண்டு கைச்சாத்திட்டார்கள்.

ஐம்பத்தாறு வருடங்களுக்கு முன் கிடைத்த சுதந்திரத்தின் பின்னர் முதன்முறையாக இருபது வருடகால தொடர்போரினை முடிவுக்கு கொண்டு வந்து அழிவுற்றிருக்கும் வடகிழக்குப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் இயல்பு வாழ்வினை மீளக்கட்டியெழுப்புவதறகாகவும், இந்நாட்டின் சகல இன மக்களும் சுபீட்சமாகவும், சுதந்திரமாகவும் சமத்துவத்துடனும் வாழ வேண்டுமென்ற நோக்குடன் கைச்சாத்திட்ட இவ் ஒப்பந்தம் இலங்கைச் சரித்திரத்தில் முதன்மை பெற்றது. சர்வதேச சமூகத்தின் பாராட்டுக்களும் இதற்குக் கிடைத்தன.

நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் அன்றைய அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. 22-12-2002ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான அரசு இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வாக அமையமுடியுமென்பதை தெளிவுபடுத்தி வலியுறுத்தினர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட கிழக்கு பிரதேசத்திற்கு பிரத்தியேக நிர்வாக அமைப்பினை நிறுவுவதற்கு உடன்பாடு ஏறபட்டது. இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு, மக்களின் நாளாந்த பிரச்சினைகள் என்பவற்றை கவனிப்பதற்கென இடைக்கால நிர்வாகம் இவ் விடயங்களை துரிதகதியில் நடைமுறைப்படுத்த உதவுமென எதிர்பார்த்த பொழுதிலும், அன்றைய அரசாங்கம் அரசியல் நெருக்கடியால் இந்த யோசனையை கைவிட்டது.

பின்னர் இதற்குப் பதிலாக இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியமர்வதற்கு உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தை குறைப்பதற்கான ஆலோசனைக்குழு இடம்பெயர்ந்த மக்களின் இயல்பு வாழக்கையை மீளககட்டியெழுப்புவதற்கும், வடகிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை துரிதமாக செயற்படுத்துவதற்கான ஆலோசனைக் குழு என இரு குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் இவைகள பெயரளவில் மட்டுமே உள்ளன.

- ஏப்ரல் மாதம் 2003ஆம் ஆண்டு வோஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டிற்கு அன்றைய அரசாங்கததுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட விடுதலைப்புலிகள் அழைக்கப்படவில்லை. ஒருதலைப்பட்சமான இச்செயற்பாட்டை இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்குரிய அந்தஸ்து கொடுக்கப்படவில்லை என்றே அநேகர் கருதுகிறார்கள். நான என்ற ஒரு கை நிலைப்பாட்டினை தவிர்தது நாங்கள் என்று இருகைகளும் இணைநதால் மட்டுமே இணக்கப்பாட்டிற்கு வரமுடியும். நீதியான நிலையான சமாதானத்தையும அடையமுடியும்.

அன்றைய அரசாங்கம் வோஷிங்டனில உதவிவழங்கும் நாடுகளுடன் ஆலோசனைகளை ஒருதலைப்பட்சமாக நடாத்தியதன் காரணத்தால் விடுதலைப்புலிகள் தங்கள் தொடர் பேச்சுக்களை அரசாங்கத்துடன் இடைநிறுத்தினர். எனினும், அனுசரணையாளர்களான நோர்வேயுடனும் முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசுடனும் விடுதலைப் புலிகள் தொடர்புகளை வைத்திருந்தனர்.

வோஷிங்டன் உதவிவழங்கும் மாநாட்டைத் தொடர்ந்து 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம் 51நாடுகளையும். 22சர்வதேச அமைப்புக்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் பங்குபற்றிய டோக்கியோ மாநாட்டில் அன்றைய அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணங்கிய "சமஷ்டி" முறை நிர்வாகப் பரவலாக்கலை பிராந்தியங்களுக்கு பகிர்வதன் மூலமே இனப்பிரச்சினைக்கு இணக்கத்தீர்வு காண முடியுமென தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் விடுதலைப்புலிகள் இம்மாநாட்டில் பங்குபற்றவில்லை. மேலும் இம்மாநாட்டில 4.3பில்லியன் ரூபாய் முழு இலங்கையையும் மீளக்கட்டியெழுப்புவதற்காக நிதி ஒதுக்கப்பட்டது. எனினும், முழுமையாக பாதிபபுற்ற வடகிழக்கு பிரதேசத்திற்கும் இடம் பெயர்ந்த மக்களுக்கும் முன் உரிமை அடிப்படையில் புனர்வாழ்வு, புனரமைப்புக்கென போதுமான நிதி ஒதுக்கீடு பகிர்ந்தளிக்கப்பட்டதா? என்பது கேள்விக்குறி.

போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தக்க வைத்துக்கொள்ளும் நோக்குடன் 31-10-2003 இல் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின முன்மொழிவு விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டது. இம் முன்மொழிவுகளில் இருக்கும் குறைநிறைகளை இருசாராரும் கலந்தாலோசிக்க முன்னர் ஜனாதிபதி தனது அதிகாரத்தை உபயோகித்து அன்றைய அரசின பாதுகாப்பு உள்துறை, ஊடகத்துறை அமைச்சுக்களை 2003 நவம்பர் 4ஆம் திகதி தானே பொறுப்பேற்றார்.

ஏப்ரல் 2004ஆம் ஆண்டு ஜனாதிபதி பாராளுமன்றைக் கலைத்தார். தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் பௌத்த-சிங்கள பேரினவாத கட்சிகளுடன் சேர்ந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி புதிய அரசாங்கத்தை நிறுவியது.

என றுமில் லாதவாறு வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு உதவிவழங்கும் நாடுகளின் உதவி அத்தியாவசியமாகியது. எனவே அவர்களின் நிபந்தனைகளுக்கு அமைய அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் கூட்டமைப்பு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டது. ஆனால் சடடப்பிரச்சினைகள் எழுப்பப்பட்ட காரணத்தலதற்போது உதவிகள் முழுமையாக நடைமுறைப்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல பிரசாரத்தில் பௌத்த, சிங்களப் பேரின வாதிகள், தமிழ் மக்களை பகடைக்காயாக உபயோகிக்கிறார்கள். சர்வதேச சமூகம் இதனைத் தற்பொழுது தெளிவாக அறிந்திருக்கின்றது. பொங்குதமிழ், எழுச்சி நிகழ்வுகள் தமிழ் மக்களுக்கு உற்சாகத்தையும், மனத்துணிவையும் கொடுக்கின்றன.

'வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்பு வேறொன்று வேண்டுவரோ' - பாரதியின் பொன் மொழிகள். (ற)

## விண்ணதிர முழங்கும் பொங்குதமிழ் சங்கு சமாதானத்திற்கான இறுதிப் பெருமுழக்கமாகட்டும்

### -யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

இன்று எம் முன்னால் தெளிவான ஒரு காட்சி தெரிகின்றது. மூன்று வருடங்களுக்கு முன் இருந்த மயக்கமான நிலைமை தற்போது இல்லை.

தெற்கில் பேரினவாத அலை சூறாவளியாக வீசுகிறது. ஏகாதிபத்திய சார்புடைய ஐக்கிய தேசியக் கட்சியானாலும் சரி, மஹிந்த ராஜபக்ஷவின் அடிப்படை பௌத்த இனவாத பொதுஜன ஐக்கிய முன்னணி – ஜே.வி.பி கூட்டாயினும் சரி அடிப்படையில் இவை பேரினவாதிகளே. இரு தரப்பினரினதும், பேரினவாத அணுகுமுறைகள் தான் வேறுபடுகின்றதே தவிர அவர்களின் நோக்கம் ஒன்றேயாகும்.

சிங்கள – பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களின் உரிமைகளை ஒருபோதும் வழங்கப்போவதில்லை என்ற ஊரறிந்த உண்மையை உலகிற்கு நிரூபிப்பதற்காக மூன்று ஆண்டுகள் காத்திருந்தோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் சரத்துக்களை அமுல் செய்யாமை, ஆறு கட்டப் பேச்சின் முடிவுகளை அமுல் செய்யாமை, சனாமிப் பொதுக் கட்டமைப்புக்கு உயர் நீதிமன்றம் விதித்த தடை, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபு குறித்து பேச்சுக்கள் நடாத்தியமை ஆகிய அனைத்துமே பேரினவாதத்தின் தன்மையை சர்வதேசத்திற்குத் தெளிவுபடுத்தப்போதுமானவை.

2001இல் எமது அபிலாஷைகளைக் கூறினோம். 2005இல் எமது அபிலாஷைகளை நிறைவேற்றாவிட்டால் நாம் யாது செய்வோமெனக் கூறுவோம்.

1957இல் பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டபோது நாம் வெறுங்கையுடன இருந்தோம். இன்று எமக்கென நடைமுறை அரசு உண்டு; முப்படைகளும் உண்டு; நிர்வாகக் கட்டுமானங்களும் உண்டு.

செப்ரெம்பர் 30இல் விண்ணதிர முழங்கவுள்ள பொங்கு தமிழ சங்கு சமாதானத்துக்கான எமது இறுதிப் பெருமுழக்கமாகட்டும்! அது பேரினவாதிகளின் செவிகளில் போர்ப்பறை முழக்கமாக ஒலித்தால் அது சிங்கள தேசத்தின் துரதிர்ஷ்டமே. (ற)

## பொங்கு தமிழில் பொங்கி எழுவோம் பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு

வவுனியாவில் இடம்பெற்ற தேசிய எழுச்சிக்கு வலுச்சேர்க்கும் விதமாக செப்ரெம்பர் 30இல் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற இருக்கும் பொங்குதமிழ் வரலாற்றில் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையையும விடுதலை வேட்கையையும் சர்வதேசம் முன் கொண்டு செல்லுகின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

சமாதான ஒப்பந்த காலத்தில் இனவாதிகள் தமது கோர முகத்தை பொதுக்கட்டமைப்பு விடயத்திலேயே வெளிப்படுத்தியுளளமையும் பேரினவாத அரசால் முன்னெடுக்கப்படும் நிழல் யுத்தமும் யுத்த நிறுத்த ஒப்பநதத்தைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளன.

இந்நிலையில், தமிழ் மக்கள் தமது இருப்பை வெளிப்படுத்தவும் தமது போராட்ட நியாயங்களை உலகிற்கு எடுத்துக்காட்டவும் வரலாறு பொங்குதமிழ் மூலம் எமக்கு மீண்டும் ஒரு அரிய சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

முதன்முதலாக 2001இல் இடம்பெற்ற பொங்குதமிழ் இலங்கையில் பாரிய அரசியல திருப்பத்தை ஏற்படுத்தியது போலவே இம்முறையும் பாரிய வரலாற்றுத் திருப்பத்தைப் பொங்கு தமிழ் ஏற்படுத்தும். இதில் தமிழர்கள் அனைவரும் அலை அலையாகத் திரண்டு, எரிமலையாய் எழுந்து தமது உணர்வினையும், ஒற்றுமையையும் வெளிபபடுத்தவேண்டிய கடமைப்பாடு உண்டு.

எனவே, அனைவரும் திரண்டு வாரீர்! என யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் சார்பாக அதன் பொதுச் செயலாளர் ப.கனகலிங்கம் கேட்டுக்கொண்டுளளார். (ற)

## தமிழரின் அபிலாஷைகளை எடுத்துரைக்க பொங்கு தமிழில் அணிதிரள்வோம்!

### கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்

தமிழததேசிய இனத்தின் அபிலாஷைகளையும் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் ஸ்ரீலங்கா அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துரைக்க அணிதிரள்வோம்.

காலங்காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டு வந்த தமிழத் தேசிய இனம் அடிக்கடி எழுச்சிகொண்டு தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையின் மூலம் அபிலாஷைகளையும், கோரிக்கைகளையும் ஸ்ரீலங்கா அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் பல்வேறு வடிவங்களில் எடுத்துரைத்து வருகின்றது.

பலமிக்க எமது விடுதலைப் போராட்டத்தைப் புரிந்துகொள்ளாத பேரினவாத அரசுகள் எம்மை ஏமாற்ற முற்படுகின்றன.

சந்திரிகா அம்மையாருடைய அரசு பேச்சைத் தொடங்கப பின்னடிப்பது ஏனென்று எமக்கு விளங்கவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்கள இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையிலே எத்தனையோ பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. எமது மக்கள் வாழ்விடங்கள் பல ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாககப்பட்டுள்ளன. இதன் மூலம் எமது மக்களினுடைய இயல்பு வாழ்க்கை முறறாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, நாளை இடம்பெறவுள்ள பொங்கு தமிழில் சகல கூட்டுறவு ஊழியர்கள், கூட்டுறவாளாகள் அனைவரும் 'பொங்கி எழுவோம்; புதுப்பொழிவு பெறுவோம்; எமது சுய நிர்ணய உரிமையை மீட்போம்!

எங்கும தமிழ் ஓங்க ஒன்றாய் எங்கள் கரம் இணைபபோம்; சங்கெடுதது முத்தமிட்டு பொங்கு தமிழென்று கூவுவோம்! (ற)

## புத்தளம் உப்பளங்களில் உப்பு உற்பத்தி அதிகரிப்பு

புத்தளம் தனியார் உப்பளங்களில் உப்பு உற்பத்தி எதிர்பார்த்த அளவைவிட அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை தொடர்ந்தும் சீராக உள்ளதாலேயே இந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது புத்தளத்தில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட தனியார் உப்பளங்களில் உப்பு உற்பத்தி இலக்கைத் தாண்டியுள்ளதாகவும் உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதன் காரணமாக, பல ஆயிரம் மெறறிக் தொன் உப்பை இம்முறை அறுவடை செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

50 கிலோகிராம் உப்பு மூடை ஒனறு சுமார் 150 ரூபா முதல் 175 ரூபா வரையும் விறபனை செய்யப்படுகிறது.

இதேவேளை, நாச்சிக்கள்ளி, காரைதீவு போன்ற உப்பளங்களிலும் சிறந்த அறுவடை கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

### கடந்த ஆண்டை விட இம்முறை

## வடபகுதி சிறுவர்களின் போசாக்கு மட்டம் உயர்வு

(கொழும்பு)

2002ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2004ஆம் ஆண்டில் வடபகுதி சிறுவர்களின போசாக்கின்மை நிலைமை குறைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

2002ஆம் ஆண்டில் 65 வீதமாக காணப்பட்ட சிறுவர்களின் போசாக்கின்மை 2004ஆம் ஆண்டில் 31 வீதமாக குறைவடைந்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

வவுனியாவில் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கருத்தரங்கிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், வடககில் சிறுவர்களின் போசாக்கின்மையை 12 வீதமாக குறைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டில் சிறுவர்கள் தொடர்பிலான மனிதவுரிமை மீறல்கள் 81 வீதம் அதிகரித்துக் காணப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும், இது தற்போது 38 வீதமாக குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# விடுதலைப்புலிகள் மீது தடை விதிக்கும் முடிவை ஐரோ.யூனியன் மறுபரிசீலனை செய்ய வேண்டும்

## -பத்மினி சிதம்பரநாதன் எம்.பி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மக்கள் தமது ஜனநாயக எழுச்சியான பொங்கு தமிழ் 2005ற்கு தயாராகி வரும் நேரத்தில் ஐரோப்பிய யூனியன் தமிழ் மக்களையும் அதன் பாதுகாவலர்களான விடுதலைப் புலிகளையும் பயங்கரவாதிகள் என பட்டம் கட்ட முற்பட்டு சில தடைகளை விதித்திருப்பது தமிழ்மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை மூட்டிவிடும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தமிழ் மக்கள் தமது உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் அதனைப் பெறுவதற்காக சாத்வீக வழியில் ஆரம்பத்தில் போராடினார்கள்.

ஆனால் சிங்கள அரசு பல குற்றச்செயல்களைச் செய்தது.கொலை, பாலியல் வல்லுறவு, சொத்துக்களை சூறையாடல், மக்களை தம் இருப்பிடங்களை விட்டு அடித்துத் துரத்துதல், பாடசாலைகளை உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பூட்டி வைத்தல்,குடியிருப்புக்களை இராணுவ மயப்படுத்தல் போன்றவற்றை செய்தது.

சர்வதேச ஆதரவுடனும் கண்காணிப்புடனும் கொண்டுவரப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாட்டின் போதும் கூட கடந்த மூன்றரை வருடங்களாக தாம்ஒப்புக்கொண்ட விடயங்களை அரசு நடைமுறைப்படுத்தவில்லை. அத்தோடு விடுதலைப் புலிகளின் தலைவர்களை கொலைசெய்யும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வந்தன.இதில் கௌசல்யன் என்ற அரசியல்துறைப் பொறுப்பாளர் கொலைசெய்யப்பட்டது கவனிக்கப்பட வேண்டியது.

சர்வதேச நாடுகள் இராணுவக் குழுக்களை வடகிழக்கில் இருந்து விலக்குமாறு கேட்டும் ஸ்ரீலங்கா அரசு அதனைச் செய்யவில்லை. இன்னமும்தமிழ் மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை திரும்பவிடாது சிங்கள அரசு தடுக்கின்றது. இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் இடங்களுக்குப் போக முடியாமல் இராணுவம் ஆக்கிரமித்து நிற்கின்றது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வகைசெய்யும் பொதுக் கட்டமைப்பு கூட உச்ச நீதிமன்றத்தால் தடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய குற்றச்செயல்களை சிங்களப் பேரினவாதம் புரிந்து வருவதோடு நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையை தமது தேர்தல் போட்டிக்காகக் குழப்பியடித்ததையும் நாம் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் ஸ்ரீலங்கா அரசுடன் அது ஒரு அரசு என்ற காரணத்துக்காக ஐரோப்பிய யூனியன் கைகோர்த்தபடி உள்ளது.

ஸ்ரீலங்கா அரசை அவ்வப்போது பாராட்டியும் வருகின்றது. மறுபுறம் உரிமை வேண்டிப் போராடும் மக்களைத்தடை செய்ய முயல்கிறது. இத்தகைய செயல்கள் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களைப் பெரும் யுத்தத்துக்குத் தள்ள வழி வகுத்துவிடும் என நாம் அஞ்சுகின்றோம்.

ஏற்கனவே சாத்வீக வழியில் போராடிய தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா அரசு வன்முறையைப் பாவித்தபோது தான் அதனைத் தடுக்க ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.மீண்டும் சர்வதேசத்தின் கவனம் இலங்கையில் குவிந்திருக்கும் தைரியத்தில் தமிழ் மக்கள் ஜனநாயக முறைகளில் நம்பிக்கை வைத்து அதனை வெளிப்படுத்த முயலும் சந்தர்ப்பத்தில் ஐரோப்பிய யூனியனின் அறிக்கை தமிழ் மக்களின் மனங்களில் வன்முறை எண்ணங்களை தூண்டிவிடும் என நாம் கருதுகிறோம்.



பொங்கு தமிழ் ஒரு ஜனநாயக எழுச்சி. இத்தகைய மாற்றத்துக்காகவே தமிழ் மக்களின் தலைவர்கள் இன்று பணி புரிகின்றார்கள். எனவே, ஐரோப்பிய யூனியன் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

சர்வதேச நாடுகளுக்கு மேலும் மேலும் எமது ஜனநாயக குரலை எடுத்துக்காட்டும் வகை யில் பெருமளவு மக்கள் பொங்கு தமிழ்-2005 இல் அணிதிரள்வோம்! எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முனையும் தமிழர்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஈரோஸ் அமைப்பின் முன்னாள் தலைவரான ஏ.ஆர். அருள்பிரகாசம் போட்டியிடத் தீர்மானித்துள்ளார். இனப் பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வே தேவை என்பதை வலியுறுத்தும் வகையில் இவர் போட்டியிடவுள்ளார்.

தமிழ் வாக்காளர்கள் ஒரு தமிழ் வேட்பாளருக்கு வாக்களிக்கும் வாய்ப்பை ஏற்படுத்துவதே தனது நோக்கம் என வெளிநாட்டு செய்தி நிறுவனமொன்றிற்கு அளித்த பேட்டியொன்றில் இவர் தெரிவித்துள்ளார்.

இரு தேசங்களின் கூட்டமைவான புதிய ஸ்ரீலங்காவை உருவாக்கும் பிரேரணையை முன்வைத்தே இவர் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

1980களின் ஆரம்பத்தில் இவர் ஈரோஸ் அமைப்பின் முன்னணி உறுப்பினராக இருந்தார். பின்னர் ஈரோஸ் அமைப்பு கலைக்கப்பட்டு அதன் முக்கிய பிரிவு விடுதலைப் புலிகளுடன் இணைந்தமை குறிப்பிடத்தக்கது.

தனக்கு ஆதரவு வழங்கும்படி கேட்டு தேசியத் தலைவர் பிரபாகரனுக்குக் கடிதம் எழுதியுள்ளதாகவும் பதிலுக்காகக் காத்திருப்பதாகவும் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

இனபேத,மொழிபேதத்தைத் தூண்டிவிடுபவர்களுக்கு எதிராக,வாக்களிக்கும் வாய்ப்பைத் தான் சிங்கள மக்களுக்கு வழங்கப் போவதாகவும் தனக்கு வெற்றிவாய்ப்பு இருப்பதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (து-6)

# சிரமதானப் பணி

(இணுவில்)

நீண்டகாலமாகத் திருத்தப் பணி கள் எதுவும் மேற்கொள்ளப்படாத தால் ஏழாலை மத்திய உசத்தி ஓடை இந்து மயானமும் அதற்குச் செல்லும் பாதையும் பற்றைக் காடாக காணப்பட்டதால் இம் மயானப் பவனையாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி இருந்தனர்.

ஏழாலை மத்தி கண்ணகி அம்மன் தேவஸதான தலைவர் திருஞானசம்பந்தர் தலைமையில் 30ற்கும் மேற்பட்ட தொண் டர்கள் கடந்த இரண்டு தினங்களாக சிரம தானப் பணி மூலம் இந்து மயானத் தையும் வீதி யையும் துப்புரவாக்கி வருகிறார்கள். (து-122)

# சர்வதேச முதியோர், சிறுவர் வலுவிழந்தோர் விழா

(கைதடி)

கைதடி அரச முதியோர் இல்ல சர்வதேச முதியோர்,சிறுவர், வலுவிழந்தோர் விழா அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் 7ஆம் திகதிவரை கைதடி அரச முதியோர் இல்லத்தில் வடக்கு-கிழக்கு மாகாண சமூகநலத் துறைத் திணைக்களப் பணிப்பாளர் ரஞ்சினி நடராஜபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

முதலாம் திகதி நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக கைதடி அரச வைத்திய அதிகாரி ச.பி.அருள்நேசன் கலந்துகொள்வார்.

இரண்டாம் திகதி அன்று சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ. ரவீந்திரனும்,சாவகச்சேரி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ச.வீரசிங்கமும் மூன்றாம் திகதியன்று சிறப்பு விருந்தினராக மாவட்ட விளையாட்டு அதிகாரி றொகான் ராஜசிங்கவும், 4ஆம் திகதி அன்று சிறப்புவிருந்தினராக கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை வைத்தியஅதிகாரி வி.கைலாசபதியும்,5ஆம் திகதி அன்று சிறப்புவிருந்தினராக ஓய்வுபெற்ற அத்தியட்சகர் கே.வி.சிவநேசனும் நவீல்ட் பாடசாலை அதிபர் தம்பிராசா சாம்சன் லூர்தீனும், 6ஆம் திகதி அன்று சிறப்பு விருந்தினராக கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் எஸ். சுப்பிரமணியமும் ஓய்வுபெற்ற அத்தியட்சகர் ஆர். துரைரட்ணமும் கலந்துகொள்வார்கள்.

இறுதி நாளான 7ஆம் திகதியன்று பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார்.

சிறப்புவிருந்தினர் உரையை யாழ். மாவட்ட பிராந்திய ஆணையாளர் பி.சிவலிங்கமும் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசனும் வழங்கவுள்ளனர். (து-7)

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

இலவச முகாம் தொடர்பான சர்வதேச தின நிகழ்வுகள் ஒக்டோபர் 1ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை கைதடி அரச முதியோர் இல்ல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் 21ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினரால் இல்ல முதியவர்களுக்கான இலவச மருத்துவ முகாம் ஒன்று நடாத்தப்படவுள்ளது. இதில் சலப் பரிசோதனை, கண்பரிசோதனை, கண்ணாடி வழங்கல் என்பவற்றுடன் அன்றைய நாள் முதியவர்களுக்கு விசேட மதியபோசனம் மற்றும் உடுபுடவைகளும் வழங்கவுள்ளன. (ற)

# மீனவ சமூகத்துக்கு மஹிந்த ஆற்றிய சேவைகளை காலம் மறக்காது எனப் பாராட்டு

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடற்றொழில் அமைச்சராகப் பதவிவகித்த காலத்தில் கடற்றொழில் அபிவிருத்திக்காக அவர் ஆற்றிய சேவைகள் மீனவ சமூகத்தின் பாராட்டுக்களை பெற்றுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் பதவியை அவர் வகித்த காலத்தில் ஹிக்கடுவ,தொடந்துவ, பேருவல மீன்பிடித் துறைமுகங்கள் உட்பட பல மீன்பிடித் துறைமுகங்களை நவீன மயப் படுத்துவதற்கு அவர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவ சமூகத்தினரின் தொழில் திறன் மற்றும் சமூக அந்தஸ்தை மேம்படச் செய்யவென சமுத்திர வள பல்கலைக்கழகம் என்ற உன்னத திட்டத்தையும் கடற்றொழில் அமைச்சர் என்ற நிலையில் பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ அப்போது அறிமுகம் செய்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினதும் அயல் நாடுகளின் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினதும் நடவடிக்கையின் காரணமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளை கடற்றொழில் அமைப்புக்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

ஆழ்கடல் மீன்பிடித்தொழிலை மேற்கொள்ளும் மீனவர்களுக்கு தொலைத்தொடர்பு உபகரணங்களை வழங்கியதன்மூலம் அவர்களின் பாதுகாப்பையும் அவர் நிச்சயித்துள்ளார்.

மீனவ சமூகத்தவரின் வீட்டு வசதிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கென பிரதமர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையையும் மீனவ சமூகம் நன்றியுடன் நினைவுகூருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-7)



சுமார் 60 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள பருத்தித்துறை மத்திய மருந்தகக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழாவில் யாழ்.சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் பாராளுமன்ற உறுப்பினர் என்.கே.சிவாஜிலிங்கம், வைத்திய கலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோர் நிற்பதையும், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், கடற்புலிகளின் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் எம்.அன்பழகன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பரு.நிருபர்)

# பொங்குதமிழில் அணிதிரள அறைகூவல்!

## தமிழருக்கு தனியான நிர்வாக அலகை ஏற்படுத்த சர்வதேசம் உதவ வேண்டும்

### -யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

மனித வரலாறு என்பது போராட்டங்களினது வரலாறாகவே தொடர்ச்சியாக காணக்கூடியதாக உள்ளது. அடக்குமுறை என்பது அதற்கு எதிரான போராட்டக் கருவின் வளர்ச்சிக்குப் பொருத்தமான சூழலை உருவாக்கிக் கொண்டே பிறக்கின்றது என்பதும்,அடக்குமுறைக்கு எதிரான போராட்டமானது சமூக வளர்ச்சியின் அடுத்தகட்ட நகர்வுக்கான அடித்தளமாக அமைவது என்பதும் உலக வரலாற்றால் எடுத்துக் காட்டப்படுகிறது.

இன,மத,மொழி,சாதி, தேசிய,வர்க்க,பால் நிலை என்ற பலவகையான வடிவங்களில் காட்சிதரும் அடக்குமுறை உலகின் பல பகுதிகளில் பல பரிமாணங்களுடன் எங்களால் காணக்கூடியதாக உள்ளது.

இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்களாகிய நாங்கள் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அடக்குமுறைக்கு உள்ளாகி அதற்கு எதிரான் போராட்டத்தில் ஈடுபட்டு அப் போராட்டம் பல பரிமாணங்களை அடைந்து, பல கட்டங்களைத் தாண்டி அதன் உச்சக் கட்டத்தை அடைந்து முக்கியமான திருப்பு முனையை அடைந்துள்ளது என்பது தற்போது உலகம் அறிந்த விடயமாகும்.

இப் போராட்டத்தின் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்திய போராட்ட வடிவமான பொங்குதமிழ் எழுச்சி பல்கலைக்கழக ஆசிரியர்களாகிய எங்களையும் உள்ளடக்கிய பல்கலைக்கழக சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் 30ஆம் திகதியன்று நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ்-2005'ஆனது சிறப்பானதொரு நோக்கத்தைக் கொண்டுள்ளது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்ற உரிமைகளை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது பொங்கு தமிழ் 2005 இன் தொனிப் பொருளாக உள்ளது.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் சர்வதேச மட்டத்திற்கு வளர்ச்சியடைந்துள்ள இன்றைய நிலையில், இவர்கள் பிரச்சினை எதுவெனத் தெரியாது என சர்வதேசம் கூறமுடியாது. இந்த சூழ்நிலையில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு தமிழர் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அங்கீகரிப்பதேயாகும்.

தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு விடயத்தில் மட்டுமல்ல தமிழீழத் தேசியத்தை ஏற்றுக்கொள்வதிலும் கடமைப்பாடு உள்ளவர்களாக சர்வதேச சமூகம் இருக்கவேண்டும்.

இதன்போது 1993இல் கையொப்பமிட்டு 1934இல் இருந்து நடைமுறைப்படுத்த ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள "அரசுகளின் உரிமைகளும் கடமைகளும் தொடர்பான மொன்ரெவிடியோ உடன்படிக்கை'' (Mon tevideo Convention of Rights and duties of states) தொடர்பாக கவனம் செலுத்துவது இன்றைய நிலையில் பொருத்தமானதாகும்.


அதன்படி, ஒரு அரசை சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்வதற்கு நிலையான சனத்தொகை (Permanent population), நிலையான தேச எல்லை (Defined Territory), அரசாங்கம் (Government), ஏனைய அரசுகளுடன் தொடர்புகளை மேற்கொள்வதாக திறன் என்ற அம்சங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் தமிழர்களிடம் உண்டு.

இலங்கை அரசு சிங்கள பௌத்த பேரினவாதக் கருத்தியலுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பட்சத்தில் தமிழ்பேசும் மக்களின் தேசிய அரசியல் போராட்டம் சர்வதேச மட்டத்திற்குத் த்ன்னுடைய போராட்டத்தை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் கட்டாயமானது. அரசு தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தி இப் போராட்டத்தை நசுக்க முயன்றுகொண்டிருக்கும் சூழ்நிலையில் அரசின் இந்த ஒடுக்குமுறை சுபாவத்தையும் உரிமை பறிக்கப்படும் அபாயத்தையும் அதன் பல பரிமாணங்களையும் மேலும் போராட்டத்தின் நியாயத் தன்மையும் சர்வதேச மட்டத்திற்கு அம்பலப்படுத்தலும் வலியுறுத்தலும் இப் போராட்டத்தின் வெற்றிக்கான முயற்சியாகவே உள்ளன.

தமிழ்பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினை வழங்குவதற்கு சிறிலங்கா அரசு தயாரில்லை என்பது மாத்திரமல்ல அவ்வாறான ஒரு முயற்சியில் வெற்றியடைவதற்கான திறமையில்லாத அமைப்பாக சிறிலங்கா அரசு காணப்படுகின்றமை தற்போது வெளிச்சமாகவுள்ளது.

சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் கடும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கைச்சாத்தாகிய சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பு கடைசியில் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்கு எதிரான சில சரத்துக்களை உள்ளடக்கியதாகக் கூறி நீதிமன்றத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ளமை இதற்கு சிறந்ததொரு உதாரணமாகும்.

அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொண்டதன் மூலமாகவும் அவ்வாறான கைச்சாத்து வேண்டிய தேவை ஏற்பட்டதும் ஒற்றையாட்சி முறையின் கீழ் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலாது என்பதையும் நடைமுறை சாத்தியமற்றது என்பதையும் எடுத்துக் காட்டுவதாகவே ஆகும்.




எனவே மீண்டும் மீண்டும் சிங்களப் பேரினவாதத்தால் ஒற்றையாட்சி என்று வலியுறுத்தப்படுவது தமிழ் மக்களுக்குள் இலங்கை அரசு தரப்பினர் மீது மேலும் மேலும் சந்தேகங்களை ஏற்படுத்தக்கூடியதாகவே உள்ளது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக கோரிக்கை மிகவும் வலுவான முறையில் ஆணித்தரமாக வலியுறுத்த வேண்டிய சூழலில் நாங்கள் தற்போது உள்ளோம்.

இந்த நெருக்கடியானது சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவுக்கு மாத்திரம் பாதிப்புகளை ஏற்படுத்தப்படுவதொன்றல்ல. யுத்தத்தாலும் இன ஒடுக்குமுறையாலும் பாதிக்கப்பட்ட இந்த சமுதாயத்தின் ஒரு பிரிவாக அந்த சமூகத்தை சார்ந்தவர்களாக பல்கலைக்கழக ஆசிரியர்களாகிய நாங்களும் வாழ்கினறோம். தொடரும் இந்த அடக்குமுறைக்கு உட்பட்டவர்களாக இருக்கும் நாங்கள், போராட்டத்திலும் உள்ளே ஒவ்வொருவரும் இருக்க வேண்டியவர்கள் ஆவர்.

எனவே, பல்கலைக்கழக ஆசிரியர்களாகிய நாங்களும் இந்தப் போராட்டத்தை வலுப்படுத்துபவர்களாகவும் தீர்வுக்கான பங்களிப்பைத் தருபவர்களாகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அதேநேரம், அனைத்து மக்களும் இத்துடன் உழைக்க வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றோம். ஏனெனில் விடுதலை என்பதும் சுதந்திரம் என்பதும் நம் அனைவருக்கும் உரியன!

காலம் காலமாக ஏமாற்றப்பட்ட தமிழினம் தலைநிமிர்ந்து ஏமாற்றுபவர்களைப் பார்த்து, 'ஏன் ஏமாற்றுகிறார்கள்?'என்று கேட்கும் உரிமையை இழக்கலாகாது என்பதற்காக பொங்குதமிழில் ஒன்றிணைவோம்.

இம் மக்கள் போராட்டத்தின் ஊடாக உலகே எங்கள் பக்கம் திருப்பிப் பார். பெயருக்குத்தான் இலங்கைப் பிரஜை. ஆனால் இலங்கையில் எப்பகுதியிலும் எங்களை அந்நியர்களாகக் கருதி பொலிஸ் பதிவுகளும் சோதனைச் சாவடிகளில் பதிவுகளும் பொருளாதாரத் தடைகளும் சிறிலங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாக சிறிலங்காவில் தமிழ் மக்களின் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகிவிட்டது. எப்படிப் பார்த்தாலும் சிறுபான்மை என்பதால் இரண்டாந்தரப் பிரஜையாக்கப்பட்ட நாங்கள் எங்கள் வளங்களை நாங்களே பயன்படுத்தி எங்களுக்கான நிர்வாக அலகொன்றினை ஏற்படுத்தி வாழ வழி செய்ய சர்வதேசம் உதவவேண்டும்.

(ற)

## தமிழர் தன்மானத்துடன் வாழ உந்துசக்தியாக அமைய வேண்டும்

### -யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

பொங்குதமிழ் எழுச்சியானது, தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் தமது உரிமைக்கான குரலை சர்வதேச உலகுக்கு எடுத்துக்காட்டும் வண்ணம் சகலரும் அணிதிரண்டு செயற்படும் நிகழ்வாகும்.

தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடுகின்றார்களேயன்றி அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல என்பது சர்வதேச உலகிற்கு முதலில் நிரூபணமாக வேண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் வெறும் கண்துடைப்பு நிகழ்வாகவும், காலத்தை இழுத்தடிக்கும் நடவடிக்கையாகவும் இல்லாமல் மக்கள் யாவரும் சமத்துவத்துடன் சகல உரிமைகளும் பெற்று சுதந்திரமாக வாழ பொங்குதமிழ் வழிசமைக்க வேண்டும்.

தமிழர்கள் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழ பொங்குதமிழ் நிகழ்வு உந்து சக்தியாக அமைய வேண்டுமென வாஞ்சையுடன் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வாழ்த்துகின்றது.

(ற)

## தமிழர்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ பொங்குதமிழ் வலுச்சேர்க்கட்டும்

### -வடமாகாண அதிபர்கள் சங்கம்

முப்பது ஆண்டுகால தமிழர் உரிமைப் போராட்டம் பல்வேறு வடிவங்களை தாங்கி அது கூர்மையடைந்து ஆயுதப் போராட்டமாக பரிணமித்து இன்று வரலாற்றுத் திருப்புமுனையொன்றில் தடம்பதித்துள்ளது.

தமிழர்கள் இதற்கு கொடுத்தவிலை அளவிட முடியாத போராட்ட வளர்ச்சிப் போக்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன. பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் என்று கால இழுத்தடிப்பு நாடகங்களே அரங்கேறின.

கடந்த மூன்றரை வருடங்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் மக்கள் ஒரு தற்காலிக சமாதான சூழலை அனுபவித்தார்கள். இது குலைந்து போவதற்கான சூழல் தற்போது ஏற்படத் தொடங்கியுள்ளமை பலருக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

நடைபெற்ற யுத்தத்தில் கல்விச் சமூகம் பலவழிகளில் பாதிப்புக்களைக் கண்டது. கல்லூரிகள் குண்டுவீசி அழிக்கப்பட்டன. அதிபர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். காலங் காலமாக தமிழருக்குரிய கல்வி வாய்ப்புக்கள் திட்டமிட்டு இன்றுவரை பறிக்கப்பட்டு வருகின்றன.

தமிழர் கல்வி திட்டமிட்டு அழிக்கப்பட்டது. கல்விக்கான வளங்கள் எமக்கு மறுக்கப்பட்டன. இத்தனைக்கும் மத்தியில் தமிழர் கல்வியைக் கட்டிக்காக்க கல்விச் சமூகம் போராடியே வந்தது.

இந்நிலையில், கல்விச் சமூகம் பல்வேறு இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியில் யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் 2001 ஆம் ஆண்டில் முதலாவது பொங்கு தமிழ் நிகழ்வை முன்னெடுத்தது. இது உலகளாவிய ரீதியில் எமது போராட்டத்திற்கு புதிய உந்துவிசைகளைக் கொடுத்தது. உயிர் கொடுக்கும் போராட்டத்திற்கு பொங்குதமிழ் தோள்கொடுத்து நின்றது.

தமிழர்களின் நியாயமான, நீதியான கோரிக்கைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தன்னாட்சி அதிகார நிர்வாகக் கட்டமைப்புடன் கூடிய கௌரவமான வாழ்க்கை என்பவற்றையே தமிழர்கள் வேண்டிநின்றார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கை, இடைக்கால் நிர்வாக அமைப்பு, சுனாமி பொதுக் கட்டமைப்பு என்று பல படிநிலைகளில் பெரும் விட்டுக்கொடுப்புடன் தமிழர் தலைவர்கள் உடன்பட்டு வந்தபோது ஸ்ரீலங்கா பேரினவாத அரசு வழமைபோன்று தனது சுயரூபத்தை வெளிக்காட்டியது.

இந்நிலையில், தமிழர் தம் நிலைப்பாட்டை சர்வதேச சமூக நியாயப்பாட்டுடன் புரிந்துகொள்ள வேண்டும். இனியும் யுத்தம் ஒன்று வந்தால் ஏற்படப் போவது அழிவு மட்டுமே. தொடர்கின்ற சமாதானச் சூழல் நிரந்தரமான யுத்த நிறுத்தமாக நிலை பெற்று பேச்சுவார்த்தை மூலமான உடன்பாட்டிற்கு வருவதற்கு சர்வதேசம் ஸ்ரீலங்கா அரசிற்கு பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்து வழிப்படுத்த வேண்டும்.

இந்த மூன்றரை வருட காலத்தில் சர்வதேச நாடுகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் தமிழர் பிரதேசங்களில் மேற்கொண்ட சமூக, பொருளாதார, கல்வி, சுகாதார கட்டுமானங்கள் நிலைபேறுடையனவாக நிலைக்க வேண்டுமாக இருந்தால் யுத்தம் தடுக்கப்பட வேண்டும். இல்லையெனில் சர்வதேச சமூகத்தில் இத்தனை நாள் அர்ப்பணிப்பும்,முயற்சியும்,உழைப்புமவீணாகப் போய்விடுமோ என நாம் அஞ்சுகிறோம்.

வவுனியாப் பிரகடனம் உலகத்திற்குப் பல செய்திகளைச் சொல்லி நிற்கிறது. அதனை வலுச்சேர்க்கும் வகையில் பொங்கு தமிழ்-2005இல் தமிழர்களின் உரிமைக்குரல் ஒட்டுமொத்தமாக ஓங்கி ஒலிக்கச் செய்து உலகத்திற்கு எமது நிலைப்பாட்டைத் தெரியப்படுத்துவோம். தமிழர்கள் எல்லோரும் ஒன்றாய் [illegible] கோர்த்து எங்கள் சந்ததிக்கான [illegible]யை உலகத்திற்கு அடித்துச் சொல்வோம்!

தமிழர்களாகிய நாம் மரபுவழித் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழவே விரும்புகின்றோம். இதைச் சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும். எமது நியாயத்திற்கான போராட்டத்தை அங்கீகரித்து சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கு சர்வதேசம் எமக்கு துணைநிற்க வேண்டும் என்பதே தமிழர்களின் ஏகோபித்த கருத்தாகும் என்பதை வடமாகாண அதிபர்கள் சங்கம் வலியுறுத்துவதோடு பொங்கு தமிழில் அனைவரையும் இணைந்துகொள்ளுமாறும் அழைக்கிறோம்.

(ற)

## தமிழர் தேசத்தின் செய்தியை சர்வதேசத்துக்கு உணர்த்துவோம்

### யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

பொங்கு தமிழ் எழுச்சி பெறும் அரசியல் போராட்டம் அல்ல. பதவி நாற்காலிக்காய் தமிழர் உரிமையை விலைபேசும் சிங்கள அரசியல்வாதிகள் இதை அவ்வாறு எண்ணி விடக்கூடும்.

எமது வீடுகளில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தை வெளியேறுமாறு கூறுவதும், எமது விளைநிலங்களுக்கு, எமது பாடசாலைகளுக்கு, எமது தொழிலுக்கு, எமது கடலுக்கு நாம் மீண்டும் செல்ல வழிசமைக்குமாறு கோருவது வெறும் அரசியல் போராட்டம் அல்ல. இது எமது வாழ்வுக்கான போராட்டமாகும்.

உரிய நிர்மாணக் கட்டுமானங்கள் முப்படைகள் சகிகம் நடைமுறை அரசு ஒன்றை கொண்டிருந்த நிலையிலேயே நாம் விட்டுக் கொடுப்பு மனோபாவத்துடன் சிங்கள தேசத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டோம்.

சர்வதேசம் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். இனிமேலும் தமிழர் தேசம் காத்திருக்காது என்ற செய்தியை செப்ரெம்பர் 30 இல் மிகத் தெளிவாக உணர்த்துவோம்.

எனவே அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள் கூட்டுறவாளர்கள் பணிப்பாளர்கள் பணியாளர்கள் அனைவரும் அணிதிரண்டு பொங்கு தமிழில் பொங்கியெழுந்து வாரீர் என யாழ்ப்பாண மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அமைப்ப விடுக்குள்ளது.

(ற)

கொடுத்தும் கொளல் வேண்டும் மனற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை - குறள்

வலம்புரி

# சந்திரிகாவின் இரட்டை வேடம்

பதினொரு வருடங்கள் ஜனாதிபதியாக இருந்துவிட்ட திருப்தியில் சந்திரிகா குமாரதுங்க அம்மையார் ஓய்வுபெறும் காலம் நெருங்கி விட்டது.

பதினொரு வருடம் என்பது நீண்டதொரு காலப் பரப்பாக இருப்பினும் அதற்குள் அவர் சாதித்த விடயங்கள் என்ன என்ற வினாவை எழுப்பினால் முடிபு வேதனையாகவே அமையும்.

சந்திரிகா அம்மையார் இனப்பிரச்சினைக்கான தீர்வைக்காண்பார் என்ற மக்களின் நம்பிக்கைக்கு மோசம் செய்துவிட்டுச்செல்லும் அம்மையார் அவர்கள் விடைபெற்றுச் செல்லும் போதாவது தனது இடத்திற்கு ஒரு பொருத்தமான வேட்பாளரை நிறுத்தினாரா எனில் அதுவும் இல்லை.

அவரது ஆட்சிக்காலத்தில் செய்யப்பட்ட ஒரேயொரு நல்லவிடயம் என்றால் அது சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையாகவே இருக்கும்.

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை செய்ததன் காரணமாகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரு சமாதான விருப்பாளர் என்ற பெயரை சர்வதேச ரீதியில் பெற்றுக்கொண்டார்.

ஆனால் அவர் செய்த பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை ரத்து செய்வதாக உடன்பட்டு அவரது கட்சி வேட்பாளரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தேர்தல் களம் புகுந்துள்ளார்.

தான் ஜனாதிபதியாக பதவியில் இருக்கும் போது தன்னால் செய்யப்பட்ட பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை இரத்துச்செய்வதாக கூறும் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தும் அளவிற்கு சந்திகா குமாரதுங்க பலவீனப்பட்டுவிட்டாரா என்ற சந்தேகம் அரசியல் களத்தில் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் தன்னையொரு சமாதான விருப்பாளராகக் காட்டிகொள்வதற்காக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் முட்டிக்கொள்வது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதும் மறுபக்கத்தால் மகிந்தவுக்கு ஆதரவளிப்பதும் ஜனாதிபதி சந்திரிகாவின் திட்டமாக இருக்கலாமா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கைக்காக அரசுக்கு வழங்கிய ஆதரவை விலகிக்கொண்ட ஜே.வி.பி.யுடன் பிரதமர் மகிந்த கூட்டுச்சேர்ந்துள்ளார்.

ஒரு ஜனாதிபதியின் கட்டளையை மீறி கட்சியின் தலைமையை உதாசீனம் செய்துவிட்டு பிரதமர் மகிந்த ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வதென்பது எவ்வகையில் சாத்தியமாகும்.

ஆக, உள்ளார்த்தமாக மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி ஆதரவு வழங்குவதன் காரணமாகவே ஜே.வி.பி., ஹெல உறுமய போன்றவற்றுடனான கூட்டுச் சாத்தியமாகியுள்ளதென்ற வாதத்தையும் தட்டி விடுவதற்கில்லை.

உண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானத்தை நேசிப்பாராயின் தனது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை முன்னிறுத்த மாட்டார்.

ஆனால் இவையெல்லாம் இப்போது தேவையில்லாத விடயமாகிவிட்டது. மகிந்தவிற்காக பிரசாரம் செய்வதற்கும் சந்திரிகா அம்மையார் தயாராக இருக்கின்றார்.

ஆக, ஜனாதிபதித் தேர்தலுக்கும் பதவி விலகலுக்கும் இடையிலான ஓர் இரட்டை வேடத்தை அம்மையார் தாங்கியுள்ளார் என்பதே நிஜம்.

# நாளைய பொங்கு தமிழ் நிகழ்விற்கு எழுச்சியுடன் தயாராகும் யாழ். குடாநாடு

(பொன்னாலை)

நாளை நடைபெறவுள்ள பொங்குதமிழ்-2005 எழுச்சிப் பிரகடன நிகழ்வுக்கான சகல ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளதா கவும் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நாளை மாலை 3.00 மணிக்கு யாழ்.பல் கலைக்கழக மைதானத்தில் பொங்குதமிழ்-2005 எழுச்சி நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

இப் பொங்கு தமிழ் தொடர்பான விரிவான ஏற்பாடுகள்,போக்குவரத்து வசதிகள் உட்பட சகல ஏற்பாடுகளும் சிறப்பாக செய்து முடிக் கப்பட்டுள்ளன.

இந்த பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜே.வி.பி.,ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் உட்பட அனைத் துககட்சிகளுக்கும தனித்தனியாக அழைப் பிதழ்கள அனுப்பப்பட்டுள்ளன.

இவற்றைவிட உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளாகள், இலத்திரனியல் ஊடக வியலாளர்கள், ராஜதந்திரிகள், பாராளுமன்ற உறுப்பினர் எனப் பலருக்கும் அழைப்பிதழ் கள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

பொங்கு தமிழ் எழுச்சி தினமான நாளை நண்பகல் 12மணியுடன் சகல பணிகளை யும் நிறுத்தி இந்த பொங்கு தமிழ் நிகழ் வில் பொங்கி வரும் வெள்ளம் என பொது மக்கள் கலந்துகொள்வதற்கான பொது அழைப்பிதழ் களும் விடுக்கப்பட்டிருக்கின்றன.

பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்துகொள்வ தற்காக வரும் வலிகாமம்,வடமராட்சி, தென் மராட்சி, தீவகம் ஆகிய பிரதேசங்களைச் சேர்நத மக்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் யாவும் சீராக செய்து முடிக்கப்பட்டுள என. எந்தெந்த இடங்களில் வாகனம தரித்து நின்று மக்களை ஏற்றி இறக்கும் பணிகளில் ஈடுபடும் என்பது குறித்த அறிவித்தல்கள் பொது மக்கள் பிரதிநிதிகளிடம் விடுக்கப்பட்டுள்ளன.

பொங்கு தமிழ் எழுச்சி தினமான நாளை யாழ்.- கொழும்பு போக்குவரத்தை தடுக் கும் முகமாக ஏ-9 வீதியை மூடி பொங்கு தமிழ் நிகழ்வில் முழு மக்களும் கலந்துகொள்வ தற்கான ஏற்பாடுகளும் சிறப்புறச் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் பொங்கு தமிழ் நிகழ் விற்கான சகல ஏற்பாடுகளும் விரிவாக செய்து முடிக்கப்பட்டிருப்பதாக யாழ். பல்கலைக் கழக சமூகத்தினராகிய பொங்கு தமிழ் ஏற் பாட்டுக் குழுவினா தெரிவித்துள்ளனர். (ந-49)

# மத்திய போக்குவரத்து சபையின் கீழ் வடபிராந்திய போ.வ. சபை இயங்கும்

வடபிராந்திய போக்குவரத்துச்சபை நேற் றில் இருந்து மத்திய போக்குவரத்து சபை யின் கீழ் இயங்குகிறது.

இதனை ஒட்டி வடபிராந்திய போக்குவரத் துச் சபையின கீழ் இருந்த யாழ்ப்பாணம், காரை நகர், பருத்தித்துறை ஆகிய பஸ் நிலையங்களில் நேற்றுக்காலை 5 மணிக்கு பெயர்பபலகைகள் திரைநீக்கம் செய்யப் பட்டன.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இப் பெயாப்பலகை திறப்பு விழா நேற்றுக்காலை 5 மணக்கு யாழ்.பஸ்நிலைய செயலாற்று முகா மையாளா பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் பெயாப்பலகையை யாழ். பஸ் நிலையப பொறுப்பதிகாரி கே.வர்மநாயகம் திறந்து வைத்தார். (அ-19)

# பற்தொகுதியை விழுங்கிய பெண் மரணம்

(கொழும்பு)

தனது பற்தொகுதியை தானே விழுங்கிய தால ஏற்பட்ட கடும் வேதனை காரணமாக ஒருவர் மரணம் அடைந்துள்ளமை தொடர் பில் ஹொரண மற்றும் கொழும்பு தெற்கு அரசாங்க வைத்தியசாலைகளின் வைத்தியர் களை கொழும்பு மரண விசாரணை அதிகாரி கண்டித்துள்ளார்.

விசேட வைத்திய அதிகாரியின் புறக் கணிப்பினால் அண்மையில் சித்தா அமரசேன (வயது-35) எனும் பெண்ணொருவர் மரணமா கியுள்ளதாகத் தெரிகிறது.

தனது மகள் கோழி இறைச்சி சாப்பிட்ட பின் தனக்கு தொண்டைப்பகுதியில் நோ ஏற்பட்டிருப்பதாகவும் முதுகுப் புறத்தில் தட்டு மாறும் தன்னிடம் கேட்டுக் கொண்டதாகவும் தன்னுடைய வாயினுள்கட்டப்பட்டிருந்த தனது பற்தொகுதியை காணவில்லை என்று அலறி யதாகவும் மரணமடைந்த அப்பெண்ணின் தாயார் தெரிவித்தார்.

ஹொரண வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு சத்திரசிகிச்சை மேற்கொள் ளப்படடு 3 நாட்களின் பின் தனது மகளுக்கு நெஞ்சு நோ ஏற்பட்டதாகவும் அதன் காரணமாக களுபோவில வைத்தியசாலையில் அனு மதிக் கப்பட்டதாகவும் குறித்த பற்தொகுதியை வெளி யேற்றுவதற்கு வைத்தியர்கள் மருந்து வழங் கியதாகவும் தாயார் தெரிவித்தார்.

நிலைமை மோசமாகி வரவே நோயாளி கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச்செல் லப்பட்டு அங்கு மரணமானார். (து-6)



பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரியில் கல்வியமைச்சரால் நிர்மாணிக்கப்பட்ட கணனிப்பயிற்சி நிலையத்தைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வீ.எஸ்.கோபாலகிருஸ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றிச சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பதையும், ஆசிரியைகள் சமயாசார முறைப்படி பால் காய்ச்சுவதையும் அதிபர் திருமதி எஸ்.சண்முகநாதன், பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.புஸ்பலிங்கம் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பருத்தித்துறை நிருபர்)

# வழங்கற் கட்டளைகளைப் பெற்றுக்கொள்க!

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து ப.நோ. கூ. சங்கங்கள் மூலம் இடம்பெயர்ந்த குடும் பங்களுக்கான ஜூன் மாத இலவச உலரு ணவு விநியோகம் எதிர்வரும் 5ஆம்திகதி முதல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

அதற்கேற்ற வகையில் யாழ்.மாவட்ட ப. நோ. கூ சங்கங்கள்மேற்படி மாதத்திற்குரிய வழங்கற் கட்டளைகளை யாழ்.மாவட்ட செய லக புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் இன்று வியாழக்கிழமை பெற்று விநியோக நடவடிக்கைகளை எதிர் வரும் 5ஆம்திகதி முதல் ஆரம்பிக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது .

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட் களுககான யூலை மாதம் வரையிலான (புள்ளி கள் 50,52) வழங்கற்கட்டளைகள் வழங்கப் பட்டு வருகின்றது. இவற்றைப் பெற்று விநி யோக நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு மேற்படி இலவச நிவாரணங்களுக்குரிய பயனா ளிகள் காலதாமதமின்றி உரிய ப.நோ. கூட் டுறவுச் சங்கங்களில் உரிய பொருட்களைப் பெற்று ஒத்துழைக்குமாறு மாவட்ட செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந)



# சாயி அருளமுதம்

புகழையோ நிந்தனையையோ நான் பொருட்படுத்துவதில்லை. ஏழைகளிடம் இருந்து சில காசுகள் பறிப்பதற்காக அம்மாதிரியான சூழ்ச்சிகளில் ஈடுபடுபவர்களையிட்டு நான் பரிதாபமடைகிறேன். இந்த கீழ்த்தரமான செயல்கள் காரணமாக மனம் நொந்திருப்பவர்களுக்கு நான் கூறுவது இது தான். 'பதினான்கு உலகங்களும் ஒன்று சேர்ந்தாலும் நான் வந்திருக்கும் கருமம் ஒரு சிறிதும் தடைப்படாது. வானமும் வையகமும் ஒன்று கூடினாலும் என்றும் எனது உண்மையை பூரணமாக கிரகிக்க முடியாது'.

நாளாந்த நற்சிந்தனை

# மனைவி தாக்கியதில் கணவன் மரணம்!

கணவனை மனைவி அடித்ததில் கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு அரியாலை முள்ளி வீதியில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் பாலசுப்பிரமணியம் (வயது 61) என்ற குடும்பஸ்தரே பலியானவராவார். இவரது மனைவி கட்டை ஒன்றினால் தாக்கியபோது அவர் மரணமடைந்ததாக மரணமடைந்தவரின் மகன் யாழ்.பொலிஸில் முறையிட்டுள்ளார்.

மரண விசாரணையின் பொருட்டு சடலம் யாழ்.பொலிஸாரினால் நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது. இதே வேளை சந்தேகநபர் தலைமறைவாகியுள் ளதாக தெரிவிக்கப்பட்டது. (து-130)



மன்னாரில் நேற்று நடைபெற்ற எழுச்சிப்பிரகடன நிகழ்வில் எழுச்சி சுடரேற்றப்படுவதை படத்தில் காணலாம்

# ஐ.நா.சபை மறுப்பு

ஜனாதிபதித் தேர்தல்கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கென தமது பிரதிநிதிகளை அனுப்ப முடியாதிருப்பதாக ஐக்கியநாடுகள் சபையின் தேர்தல் கண்காணிப்புச் சபை, தேர்தல் ஆணையாளருக்கு தெரிவத்துள்ளது. கண்காணிப்பாளர்களை அனுப்புவதற்கு ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையின் அனுமதியைக் கோர கால அவகாசம் இன்மையால் கண்காணிப்பாளர்களை அனுப்ப முடியாதிருப்பதாக ஐ.நா.தேர்தல் கண்காணிப்புச் சபை தெரிவித்துள்ளது.(ச-4)

## மன்னார்...

சேகரன், திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன், ஜனாப் அலிகான் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

எழுச்சி உரைகள், அரங்க நிகழ்ச்சிகள் என்பவற்றைத் தொடர்ந்து வவுனியாப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வுகள் இடம்பெற்ற வேளை மக்களை கலந்து கொள்ள விடாமல் தடுக்கும் நோக்குடனும் அச்சுறுத்தும் எண்ணத்துடனும் மைதானத்தைச் சூழ ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

சமகாலத்தில் மன்னார் பஸ் நிலையத்தில் குண்டொன்றும் வெடித்துள்ளது.

நிகழ்வுகள் நிறைவடைந்ததும் மக்கள் திரும்பிச்செல்ல சோதனைச் சாவடிகளை இரவு 10மணிவரை திறந்து விடுவதாக முன்னர் உறுதி அளித்திருந்த படைத்தரப்பு பின்னர் அதனை மீறி பாதையினை மூடியதாக தெரிவிக்கப்பட்டது. (ச-4.8)

# ஐரோப்பிய ஒன்றியத்தின்...

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை தமிழ் மக்களுக்கும் எங்களுக்கும் அதிர்ச்சி தருகிற விடயமாகத்தான்இருக்கிறது.

இங்குள்ள உண்மை நிலைகளை உலகிற்கு செல்ல விடாமல் தடுப்பதற்கான பல ராஜதந்திர பிரசார நடவடிக்கைகளை அண்மைக்காலமாக அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

குறிப்பாக பேச்சுவார்த்தைகள் உள்ளிட்ட சமாதான நடவடிக்கைகளை முடக்கி இங்குள்ள உண்மை நிலைகளை மூடி மறைத்து எமது உரிமைப்போராட்டம் மற்றும் அரசியல் முன்னெடுப்புகள் தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு தவறான புரிந்துணர்வை உருவாக்குவதில் அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

அரசாங்கத்தின் இச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை வெளிவந்திருக்கிறது. யுத்த நிறுத்த காலப்பகுதியில் எமது போராளிகள், ஆதரவாளர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டுள்ளனர்.

இப் படுகொலைகளுக்கு இராணுவம் தான் முழுப்பொறுப்பு. இப்படி அரச பயங்கரவாதத்தை பெருமளவிற்கு கட்டவிழ்த்து விட்ட அரசிற்கு எவ்வித கண்டனத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிக்கவில்லை.

எங்களைப் பொறுத்தவரையில் சமாதான முன்னெடுப்புகளுக்கு இப்படியான நடவடிக்கைகள் ஒரு பின்னடைவைத் தரும். ஏன் எனில் சர்வதேச சமூகத்தினது நேர்மையான உண்மையான ஈடுபாடுதான் தமிழ் மக்களை இந்த சமாதான முன்னெடுப்புக்களில் நம்பிக்கைகொள்ள வைத்தது.

ஒரு தலைப்பட்சமான ஒரு பக்க சார்பான நிலைப்பாடுகள் சமாதான முன்னெடுப்புக்களை பலவீனப்படுத்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவானது, தமிழ் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சமாதான முன்னெடுப்புக்கள் மீது நம்பிக்கையின்மையைத்தான் உருவாக்கும்.

இலங்கை இனப்பிரச்சினையில் சமதரப்பு என்கிற வகையில் தமிழ் மக்களின் கருத்துக்களையும் அறிந்து நீதியான முடிவை மேற்கொள்ள வேண்டும் என்று சர்வதேச சமூகத்திற்குநாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம்.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் இதைக் கருத்திற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை தற்காலிக நடவடிக்கை என்றுதான் கூறியிருக்கிறார்கள். ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் நேரடியாக இங்கு வந்து கள நிலைமைகளைப் பார்வையிட்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி முடிவெடுக்க வேண்டும் என தமிழ்ச்செல்வன் கூறினார்.

தமிழ் மக்கள் மீதான சர்வதேச சமூகத்தின் எண்ணத்தைத் தகர்க்க ; குலைக்க அண்மைக்காலமாக அரசாங்கம் தீவிரமான பிரசாரத்தை மேற்கொண்டுவந்தது.

தமிழ் மக்களின் இந்த உயர்நிலை வளர்ச்சியைப் பலவீனப்படுத்த அரசு மேற்கொண்ட முயற்சியின் வெளிப்பாடுதான் இந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை. இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதன் எதிரொலியாகத்தான் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

அந்தப் படுகொலைக்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லையென்று நாம் பல முறை விளக்கியுள்ளோம் என்றார். தற்போது தென்னிலங்கையில் மீண்டும் சிங்கள இனவாதம் தீவிரமடைந்துள்ளது. சமாதான முன்னெடுப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அவர்களது நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் ஒரு பக்க சார்பான தோற்றத்தை அளிக்கும் அறிக்கையை வெளியிட்டிருப்பது இனவாதிகளுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்கும். தமிழ் மக்கள் மீது இனப்படுகொலைகளையும் அடக்கு முறைகளையும் ஏவிவிட ஊக்கமளிப்பதாகவே இந்த அறிக்கை அமையும்.

தற்போது சிங்களப் பேரினவாதம் தீவிரமடைந்து முன்னைய பயங்கரவாத நிலைமைகள் உருவாகி வரும் சூழலில் அரச தரப்பின் பிரசாரத்தை மட்டும் நம்பிக்கொண்டு சர்வதேச சமூகம் முடிபு மேற்கொண்டிருப்பது தமிழ் மக்களுக்கு கவலை தருகின்ற விடயம்.

இருந்தாலும் இது தற்காலிகமாகத்தான் இருக்கும். தமிழ் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு சர்வதேச சமூகம் நீதியான நிலைப்பாட்டை மேற்கொள்ளும் என்று நம்புகின்றோம்.

ஐரோப்பிய ஒன்றியம் உத்தியோக பூர்வமாக எங்களுக்கு இம் முடிபை அனுப்பவில்லை. எனவே ஊடகங்கள் வாயிலாகத்தான் நாம் அறிந்தோம் என தமிழ்ச்செல்வன் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகளை விரைவில் சந்தித்து எங்களது தலைமைப்பீடத்தின் உறுதியான நிலையை விளக்குவோம். நோர்வே தரப்பைப் பொறுத்தவரை பதவியேற்கவுள்ள நோர்வே புதிய அரசு வழமையான தனது நிலையை மேற்கொள்வதாக அறிவித்திருக்கிறது.

நோர்வே அனுசரணையாளர்களை விரைவில் சந்திக்கவுள்ளோம். அச் சந்திப்பின்போது எங்களுடைய அதிர்ச்சியையும் அதிருப்தியையும் தெரிவிக்கவுள்ளோம்.

உண்மைத்துவத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து சர்வதேச சமூகம் நீதியான முடிவை மேற்கொள்ளவேண்டுமென்று நோர்வே தரப்பிடம் தெரிவிப்போம்.

சிறிலங்கா அரசாங்கத்தின் அழுத்தம், பிரசாரங்களுக்குப் பணிந்து போன நிலையில் சில தற்காலிகமாகவே இம் முடிபை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டுள்ளது. இது இறுதியான முடிபு அல்ல.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அனைத்து நாடுகளும் இணைந்து தீர்மானகரமாக நிலைப்பாடு எதுவும் எடுக்கவில்லை. தடை தொடர்பாக ஆலோசிப்பதாகவே அவர்களது சொற்பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எங்களுடைய நீதியான நியாயமான நிலைப்பாடுகளை விளக்குவதற்காக ஐரோப்பிய நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

எங்களுடைய கருத்துக்களை பல்வேறு வழிமுறைகள் ஊடாக அவர்களுக்குத் தெரியப்படுத்துவோம். சர்வதேச சமூகமானது ஒருதலைப் பட்சமாகத் தொடர்ந்து இத்தகைய முடிபுகளை மேற்கொண்டால் தமிழீழ விடுதலைப் புலிகளும் துர்ப்பாக்கியமான இக்கட்டான நிலைமையில் முடிபுகள் எடுக்க நேரிடும் என்றார் தமிழ்ச்செல்வன். (ச-4,8)

Active Theatre Movement
WALK IN INTERVIEW.

**Post of field officer for psychosocial programme (02)**

Qualifications: G.C.E (A/L) Qualified
Experience in social services and cultural activities.
Applicants should have valid motor bike license.

Age limit : 22- 35 yrs
Salary : Negotiable

**Post of finance Assistant**

Qualifications: G.C.E (A/L) Qualified in Commerce.
Minimum credit passes in accountancy

Age limit : 18- 30 yrs
Salary : Negotiable

Interested candidates, who possess the specified qualifications and work experience, please should be present to the office directly at 3 – 5 pm within 5days.

Active Theatre Movement
"Arulaham", Adiyapatham Rd,
Thirunilvely.

C-1706

மனோகரா



புதிய வெளியீடு
சிம்பு, கோபிகா
மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
கா.நே: 10.30,2.30,6.30,9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
இன்று முதல்
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு
நமீதா நடித்த
சாணக்கியா
கா.நே: 2.30, 06.30, 9.30, (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை



விக்ரம்,
சதா,
விவேக்
நடித்த
அந்நியன்
கா.நே: 11.30, 02.45, 6.00 (பு.நே)

பார்த்தீர்களா? படித்தீர்களா ?
ஈசுர விநாயகரின் வெளியீடு: [6] 01.01.1994
பொங்கும் தமிழன் விடுதலைப் பொலிவு கண்டு எதிரி ஏங்கிட வந்திடு! வந்திடு!!
—சோழியூரான் பிறைசூடிக்குரு.
(9923)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.